NATIONAL MODEL SCHOOLS
Estd.1987
(CBSE | MATRIC)
COIMBATORE | NILGIRIS

# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 33 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Nov 14 - 20, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

NATIONAL MODEL SCHOOLS
Estd.1987
(CBSE | MATRIC)
COIMBATORE | NILGIRIS

EESAAVASYAM IDAM SARVAM
MY DUTY IS TO SERVE
KNOWLEDGE IS SUPREME
Estd. 1987

## NATIONAL MODEL GROUP OF SCHOOLS

(CBSE | MATRIC | INTERNATIONAL)

## Every child is special. Every child is unique. Let us unleash their potential !




**At National Model Schools, we are dedicated to build a community of open-minded learners that can lead, collaborate, reflect, express, adapt and thrive with compassion in a global environment.**

www.nationalmodelschools.edu.in

+91 9944411111

## OUR SCHOOLS

COIMBATORE

NATIONAL MODEL SENIOR SECONDARY SCHOOL (CBSE)
Peelamedu, Coimbatore
A NATIONAL MODEL GROUP SCHOOL
CBSE

NATIONAL MODEL MATRIC. HIGHER SECONDARY SCHOOL (MATRIC.)
Peelamedu, Coimbatore
A NATIONAL MODEL GROUP SCHOOL
MATRICULATION

THE ORIGAMI CONCEPT SCHOOL
A NATIONAL MODEL GROUP SCHOOL
INTERNATIONAL

NILGIRIS

NATIONAL MODEL SCHOOL
NILGIRIS
INTERNATIONAL

Kalloori Nagar, Peelamedu, Coimbatore, Tamil Nadu - 641004



# குரலற்றவர்களுக்கு குரல் கொடுப்பது யார்?

சாணக்கியன்
தி கோவை மெயில்

**"எம்பிசி தொகுப்பை மூன்றாக பிரித்தது தமிழக அரசியல் வரலாற்றில் சமூகநீதிக்கான மற்றொரு மைல்கல் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், 7 சதவீத தொகுப்புக்குள் இருக்கும் சீர்மரபினர்களையும், அரசியல் ரீதியாக குரல் கொடுக்க ஆதரவு இல்லாத வலையர், வண்ணார், ஒட்டர், போயர், தொட்டிய நாயக்கர், மீனவர் போன்றவர்களையும் இந்த 7 சதவீத தொகுப்புக்குள் அடக்கியதால் அவர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது."**

சமூக நீதி, இடஒதுக்கீடு என்ற வார்த்தை அதிகம் உச்சரிக்கப்படும் மாநிலம் தமிழகம் தான். சமூக நீதி, இடஒதுக்கீடு ஆகியவற்றுக்கு தமிழகம் எப்போதும் முன்மாதிரி மாநிலமாகவே இருந்து வருகிறது. இங்குள்ள பிராதன திராவிடக் கட்சிகளான அதிமுக, திமுக ஆகியவை சமூகநீதி, இடஒதுக்கீடுக்கு தாங்கள் தான் பிரதான காவலன் என்பதை மையமாக வைத்து தான் அரசியல் வியூகங்கள், நகர்வுகளை எப்போதும் செய்து வருகின்றன.

இந்தியாவில் வேறு மாநிலத்தில் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் தான் 69 சதவீத இடஒதுக்கீடு இருந்து வருகிறது. 69 சதவீத இடஒதுக்கீடுக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்று சட்ட ரீதியாக பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா என்பதை யாராலும் மறுக்க இயலாது. ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது நாட்டிலேயே இடஒதுக்கீட்டுக்கான முதல் சட்டத் திருத்தத்துக்கான குரல் தமிழகத்தில் இருந்து தான் ஓங்கி ஒலித்தது.

**முதல் சட்டத்திருத்தம்:**

1951 பேரவைத் தேர்தலுக்கு முன்பு பெரியார் மற்றும் திமுக தலைவர்களான அண்ணா, கருணாநிதி உள்ளிட்டோர் குரல் கொடுத்தாலும், பிரதமர் நேருவிடம் தனக்கு இருந்த மிக நெருங்கிய தொடர்பை பயன்படுத்தி இடஒதுக்கீட்டுக்கான முதல் சட்டத்திருத்தத்துக்கு மூலவராக இருந்தவர் அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரான காமராஜர் என்பதே உண்மை.

மேலும், 1963ல் முதல்வர் பதவியைவிட்டு விலகுவதற்கு முன்பு இந்து நாடார்களை, உயர் வகுப்பில் இருந்து பிற்பட்டோர் வகுப்புக்கு கொண்டுவந்தார் காமராஜர். காமராஜருக்கு அடுத்து முதல்வராக இருந்த அண்ணா காலத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோர் பட்டியலை திருத்த முன்னெடுப்புகள் நடத்தப்படவில்லை. பின்னர் முதல்வராக வந்த கருணாநிதி, 1973ல் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 2 சதவீதம் (16இல் இருந்து 18 சதவீதமாக) உயர்த்தியும், பிற்பட்டோர் பட்டியலுக்கான இடஒதுக்கீட்டை 6 சதவீதம் உயர்த்தியும் நடவடிக்கை எடுத்தார். மேலும், கொங்கு வேளாளர் கவுண்டர்களை உயர் வகுப்பில் இருந்து பிற்பட்டோர் வகுப்புக்குக் கொண்டுவந்தார்.

திருச்செந்தூர் தொகுதி இடைத்தேர்தலின்போது வெற்றி பெறுவதற்காக 15 சதவீத கிறிஸ்தவ நாடார்களின் ஆதரவை பெற ஒட்டுமொத்த கிறிஸ்தவ நாடார்களையும் பிற்பட்டோர் பட்டியலுக்கு கொண்டுவந்தார் எம்ஜிஆர்.

**அழுகிய மாங்கனி:**

1980 காலகட்டங்களில் வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கோரி மிகப்பெரிய அளவிலான போராட்டங்களை மருத்துவர் ராமதாஸ் நடத்தி வந்தார். 1989ல் ஆட்சிக்கு வந்த கருணாநிதி, பிற்பட்டோர் பட்டியலை பிரித்து வன்னியர்கள், இசை வேளாளர், பரதர்கள் (மீனவர்), பர்தவராஜ குல மீனவர், வண்ணார், நாவிதர், குயவர், ஒட்டர் , போயர், குரும்பக்கவுண்டர், சீர்மரபினர்களான கள்ளர், பிரமலை கள்ளர், கொண்டையங்கோட்டை மறவர், செம்பரத்து மறவர், வலையர்கள், அம்பலக்காரர், வேட்டுவ கவுண்டர், தொட்டிய நாயக்கர், ஊராளி கவுண்டர் உள்பட 108 சாதிகளை மிகவும் பிற்பட்டோர் தொகுப்பை (எம்.பி.சி.) உருவாக்கினார்.

அப்போது பேரவையில் பேசிய கருணாநிதி, 50 சதவீதமாக இருந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டில் 3 முதல் 4 சதவீத இடங்களைப் பெற்று வரும் வன்னியர்களுக்கு இனிமேல் 6 முதல் 7 சதவீத வாய்ப்பு கிடைக்கும் என்றார். ஆனாலும், திருப்தி அடையாத ராமதாஸ், முழு மாங்கனி கேட்ட எங்களுக்கு அழுகிய மாங்கனியை கொடுத்துவிட்டார் கருணாநிதி என விமர்சனம் செய்தார்.

**ராமதாஸ் கோரிக்கை:**

தொடர்ந்து வன்னியர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீடு கோரிக்கையை அடுத்தடுத்து வந்த அதிமுக, திமுக அரசுகளிடம் வைத்துக்கொண்டே இருந்தார். இந்நிலையில், கடந்த டிசம்பரில் இதே கோரிக்கையை வைத்து மீண்டும் போராட்ட அஸ்திரத்தை எடுத்தார் ராமதாஸ்.

தேர்தல் நேரத்தில் எழுந்த இக்கோரிக்கையை நிறைவேற்ற சாதிவாரி கணக்கெடுப்புக்காக நீதிபதி குலசேகரன் குழுவை முதல்வர் எடப்பாடி பழனிசாமி நியமித்தார். இக்குழுவின் அறிக்கை வர 6 மாத காலம் ஆகும் நிலையில், தேர்தலுக்கு முன்பாக வன்னியர்களுக்கு 12 சதவீத உள்ஒதுக்கீடாவது வழங்க வேண்டும் என்று தனது நிபந்தனையை தளர்த்தினார்.

ராமதாஸின் கோரிக்கையை முதல்வர் எடப்பாடி பழனிசாமி கடைசி நேரத்தில் ஏற்றுக்கொண்டு வன்னியர்களுக்கு மட்டுமின்றி பிற எம்.பி.சி. பிரிவினரும் பயனடையும் வகையில் எம்.பி.சி. தொகுப்பை மூன்றாகப் பிரித்து அதற்கான மசோதாவை பேரவையில் நிறைவேற்றினார்.

அதன்படி, வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர், படையாச்சி, பள்ளி, அக்னிகுல சத்திரியர் என 7 உள்பிரிவுகளை அடக்கிய வன்னியர்குல சத்திரியர் சமூகத்துக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு கிடைக்கும் வகையில் ஒரு தொகுப்பும், அம்பலக்காரர், பிரமலை கள்ளர், மறவர், சேர்வை, செம்பநாட்டு மறவர், ஊராளி கவுண்டர், வலையர், வேட்டுவ கவுண்டர், மீனவர் உள்பட 68 சீர்மரபினர் மற்றும் தொட்டிய நாயக்கர், வண்ணார், ஒட்டர், வலையர், போயர் உள்பட 25 எம்.பி.சி. பிரிவினர் ஆகியோருக்கு 7 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மேலும் 22 எம்.பி.சி. பிரிவினரை தனியாகப் பிரித்து 2.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. சாதிவாரியான கணக்கெடுப்பு வரை, இது அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

**நீதிமன்றத் தடை:**

எம்.பி.சி. தொகுப்பு பிரிக்கப்பட்ட விவகாரம் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு தனிப்பட்ட முறையில் வெற்றி என்ற வகையிலும், ராமதாசுக்கு ஓரளவு வெற்றி என்ற வகையில் அமைந்தது.

எடப்பாடி தொகுதியில் மக்களவைத் தேர்தலின்போது அதிமுக 8,000 வாக்குகள் திமுகவைவிட பின்தங்கியிருந்த நிலையில், வன்னியர் இடஒதுக்கீடு காரணமாக எடப்பாடி பழனிசாமி சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆனால், வடதமிழகம் முழுவதும் இது அதிமுகவுக்கு எதிராக வன்னியர் தவிர்த்த பிற சாதியினரை திருப்பி விட்டது.

**குரல்வளை நெரிக்கப்பட்ட சமூகங்கள்:**

எம்பிசி தொகுப்பை மூன்றாக பிரித்தது தமிழக அரசியல் வரலாற்றில் சமூகநீதிக்கான மற்றொரு மைல்கல் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், 7 சதவீத தொகுப்புக்குள் இருக்கும் சீர்மரபினர்களையும், அரசியல் ரீதியாக குரல் கொடுக்க ஆதரவு இல்லாத வலையர், வண்ணார், ஒட்டர், போயர், தொட்டிய நாயக்கர், மீனவர் போன்றவர்களையும் இந்த 7 சதவீத தொகுப்புக்குள் அடக்கியதால் அவர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்போது வன்னியர் இடஒதுக்கீடுக்கு உயர் நீதிமன்றத்தில் மதுரை கிளை தடை விதித்துள்ள நிலையில், இதை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது. இருப்பினும், குரலற்ற சமூகங்களான வலையர், வண்ணார், ஒட்டர், போயர், தொட்டிய நாயக்கர் போன்ற சமூகங்களை 7ல் இருந்து 3 சதவீதம் தனியாகப் பிரித்து வழங்கும்போது தான் சரியான சமூக நீதியாக இருக்கும்.

அதற்கான நடவடிக்கையில் முதல்வர் ஸ்டாலின் ஈடுபட்டுவிட்டு தான் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்ய வேண்டும். அப்போது தான் தனது தந்தையான கருணாநிதி போல உண்மையான சமூகநீதிக் காவலராக குரலற்ற சமூகங்களும் ஸ்டாலினை வாழ்த்தும் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

### நிச்சயம் நீதி கிடைக்கும்

இது குறித்து அரசியல் திறனாய்வாளர் ரவீந்திரன் துரைசாமி கூறும்போது, வெளிப்படையான சாதிவாரி கணக்கெடுப்புக்குப்பின் எம்.பி.சி. தொகுப்பை பிரித்திருந்தால் இதுபோன்ற பாதிப்பு ஏற்பட்டிருக்காது. வன்னியர்களுக்கு பாமகவும், பிரமலை கள்ளர், மறவர்களுக்காக அனைத்து அரசியல் கட்சிகளிலும் பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆனால், எஞ்சிய சமூகங்கள் ஒரு பகுதியில் அடர்த்தியாக இல்லாததால் அவர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் கிடைப்பதும் இல்லை. அவர்களின் குரல் அரசியல்வாதிகள் காதில் விழுவதுமில்லை.

குரலற்ற சமூகங்களான வலையர், வண்ணார், பர்வதராஜகுல மீனவர் போன்ற சமூகங்களுக்கு குரல் கொடுக்க யாரும் இல்லை. இதை வாய்ப்பாக பயன்படுத்தி எம்.பி.சி. தொகுப்பில் அவர்களுக்கு அநீதி வழங்கப்பட்டுள்ளது. கல்வியில் பின்தங்கிய இந்த சமூகங்களை, கல்வியில் முன்னேறிய சமூகங்கள் கொண்ட 7 சதவீத தொகுப்பில் வைத்துள்ளதால் குரலற்ற சமூகங்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் பாதிப்பு ஏற்படும். எனவே, எம்.பி.சி. தொகுப்பில் 7 சதவீதத்தை 4, 3 என பிரித்து குரலற்ற சமூகங்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றார் ரவீந்திரன் துரைசாமி.

## சாகாவரம் பெற்ற சிரஞ்சீவி

சூழல் தொடர்

சர்வ இடங்களிலும் வியாபித்துள்ள சர்வேஸ்வரனைப் போல உலகில் தற்போது எங்கெங்கு பார்த்தாலும் இந்த பிளாஸ்டிக் பை எனும் கேரிபேக் காணப்படுகிறது. நவீன வணிக கலாச்சாரத்தின் ஒரு அங்கமான இந்த பிளாஸ்டிக் கேரிபேக் ஏதாவது ஒரு பொருளை எளிதில் எடுத்துச் செல்ல பயன்படுகிறது. இந்த ஒரே ஒரு நன்மைக்காக நாம் அனுபவிக்கும் தீமைகள் ஏராளம்.

இந்த பிளாஸ்டிக் கேரி பேக்குகள், சாகாவரம் பெற்ற சிரஞ்சீவியைப் போல பல நூறு ஆண்டுகளுக்கு மக்காமல் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டே இருக்கும். இந்த பிளாஸ்டிக் வாழ்வதால் நமக்கு என்ன சிக்கல் என்றால், இவற்றால் பல வகையிலும் பல கொடுமைகளை மனித குலமும் மற்றவர்களும் அனுபவிக்கிறோம். அதில் வாயில்லா ஜீவன்கள் ஆன கால்நடைகள் கூட அடங்கும். மீதமாகும் உணவு பொருளை இந்த பிளாஸ்டிக் கேரி பேக்கில் போட்டு கால்நடை தின்பதற்கு வைக்கும் கர்ண மகா பிரபுக்கள் இங்கு ஏராளம். இது போக குப்பையில் மீதமாகும் உணவு, பழம் ஆகியவற்றை தேடி தின்னும் கால்நடைகள் வயிற்றில்



அடைப்பு ஏற்பட்டு சாவது அன்றாட செய்தியாகிவிட்டது.

தற்போது சென்னையில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தில் கூட நீர் தேங்கி இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் ஒரு காரணம் இந்த பிளாஸ்டிக் செய்யும் கைவரிசை என்றால் அது மிகையாகாது. சாக்கடை நீர் செல்லும் வழிகள் மற்றும் மழைநீர் பாதைகளில் கொத்துக்கொத்தாக மற்ற குப்பைகளுடன் இந்த பிளாஸ்டிக் பை சேர்த்து அடைத்துக் கொள்கிறது. ஆயிரம் நல்லவர்களுக்கு இடையே சில சமூக விரோதிகள் போல இந்த பிளாஸ்டிக் பைகள் ஒரு சங்கிலியை போல மற்ற குப்பைகளை இணைத்து அடைத்துக் கொண்டு இருக்கின்றன. இரண்டு மூன்று நாட்களில் அடைப்பு சரி செய்யப்படுகிறது அல்லது தானாகவே நீரின் வேகத்தில் அகற்றப்படுகிறது. ஆனால் அதற்குள் இந்த நீர் தேங்கிய பகுதிகளில் மக்கள் படும் துயரம் சொல்லி மாளாது. அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகள்,பணியாளர்கள் என்று அனைவரும் படாதபாடு படும் வகையில் செய்வதில் இந்த பிளாஸ்டிக் பைகளுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு.

அதுதான் அரசாங்கம் இவ்வளவு மைக்ரான் என்று விதிமுறைகளை வைத்திருக்கிறது, இதுபோன்ற பிளாஸ்டிக் பைகளுக்கு தடை விதித்து இருக்கிறது என்றெல்லாம் அப்பாவித்தனமாக நம்மை நாமே நம்பிக்கொண்டு இருக்கக்கூடாது. எப்படி செவ்வாய் கிரகத்துக்கு ராக்கெட் விடுகின்ற நாம் டெங்கு கொசுவை ஒழிக்க முடியவில்லையோ, அதுபோல இந்த ஈஸி டூ கேரி பிளாஸ்டிக் பையை நம்மால் ஒழிக்க முடிய வில்லை என்பது தான் உண்மை.

பள்ளியின் சுவர்களிலும் ஆட்டோவின் பின் புறத்திலும் பிளாஸ்டிக்கை ஒழிப்போம் என்று எழுதி பிரச்சாரம் செய்வதால் மட்டும் பிளாஸ்டிக் குப்பைகளை ஒழித்து விட முடியாது. முள் மரத்தை வேருடன் களைவது போல இதன் தொழிற்சாலைகளில் தடுக்க வேண்டும். அதற்கு முன்பு அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மாற்று பொருட்கள் உற்பத்தி அல்லது மாற்றுத் தொழில் ஏற்பாடு செய்யவேண்டும். கண்டிப்பாக நம்மால் செய்ய முடியும்.

இந்த பிளாஸ்டிக் பைகளை பொருட்களை எடுத்துச் செல்ல உதவுவது என்ற ஒரே ஒரு நன்மைக்காக பிளாஸ்டிக் குப்பைகளை உருவாக்குவதை சகித்துக் கொள்வது எந்த வகையிலும் நியாயம் அல்ல.

குப்பை மலைகளை உருவாக்குவது, அப்பாவி கால்நடைகள் பலியாவது, கடலுக்குப் போய்ச் சேர்ந்தாலும் கூட அங்கு உள்ள கடல் வாழ் உயிரினங்களை கொல்வது, பிளாஸ்டிக் குப்பைகளை எரிக்கும் பொழுது அதிலிருந்து வெளியில் வாயுக்களால் தோல் நோய் முதல் புற்றுநோய் வரை பல நோய்களை உருவாக்குவது என்று பல தீமைகளை செய்யும் இந்த பிளாஸ்டிக் பைகளை ஒழித்துக்கட்ட வேண்டும். இல்லை என்றால் ஒரு சிறு நெருப்புப் பொறி, பெரிய காட்டை அழித்து விடுவது போல இந்த கேரிபேக் நம்மையும் பேக் செய்து விடும்.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

THE COVAI MAIL
RNI: TNBIL/2014/55455.
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
Postal Reg.No: CB/123/2021-23.

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

Vol No. : 8 Issue No. : 33 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Nov 14 - 20, 2021, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

## பி.எஸ்.ஜி. மருத்துவமனையில் பாத பராமரிப்பு மையம்

# சர்க்கரை நோய்க்கும் கால்களுக்கும் என்ன தொடர்பு?

சு.ரம்யா
தி கோவை மெயில்

இந்தியாவில் சர்க்கரை நோயினால் பாதிப்படைபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டே இருக்க, கட்டுப்பாடற்ற சர்க்கரை நோயினால் பல நோயாளிகள் தங்கள் கால்களை இழக்கவேண்டிய சூழ்நிலை நேர்ந்து வருகிறது என்பது பரிதாபத்திற்குரிய ஒன்று.

இதைத் தடுக்கவும், சர்க்கரை நோயினால் கால்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கவும் பி.எஸ்.ஜி. மருத்துவமனை தற்போது பாத பராமரிப்பு மையத்தை, 2021 உலக சர்க்கரை நோய் தினத்தன்று அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென சிகிச்சை வழங்க அனுபவம் மிக்க நிபுணர் குழுவை மருத்துவமனை நியமித்துள்ளது.

சர்க்கரை நோயினால் கால்கள் எவ்வாறு பாதிப்படைகிறது, இந்நோய் உள்ளவர்கள் தங்கள் கால்களை இழக்காமல் பாதுகாத்துக் கொள்வது எப்படி, இதனால் நேரக்கூடிய அனைத்து வகையான கால்கள் தொடர்பான பாதிப்புகளுக்கும் சிறப்பான சிகிச்சை என்னென்ன உள்ளன என்பதையும் இத்துறையின் வல்லுநர்கள் தெரிவித்தனர். அதன் தொகுப்பு வருமாறு:

**நாட்பட்ட சர்க்கரை நோய் உள்ளவர்கள் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் கால் நரம்புகளைப் பாதித்து, காலில் உணர்வற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. அதனால் புண் ஏற்படும்போது உணர முடியாமல் போய்விடுகிறது.**

## கால்களின் ஆரோக்கியமே மகிழ்ச்சி!

- டாக்டர்.வி. ராமமூர்த்தி, பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், புனர்வாழ்வு மருத்துவத் துறை



இந்தியாவில் ஒரு தொற்று நோயைப் போல சர்க்கரை நோய் பரவி வருகிறது. 100 பேர் கொண்ட ஒரு குழுவில் 15 பேருக்கு இந்நோய் இருப்பதாக ஆய்வுகள் கூறுகிறது. அதிலும், இந்தியா சர்க்கரை நோயாளிகளின் தலைநகரமாக மாறி வருகிறது.

தோராயமாக இந்தியாவில் வருடத்திற்கு ஒரு லட்சம் மக்கள் சர்க்கரை நோயினால் கால்களை இழக்கின்றனர்.

தினசரி மருத்துவமனைக்கு கால் பாதங்களில் தீ வைத்தது போல் எரிச்சல், அதிக தூரம் நடக்க முடியாமை போன்ற காரணங்களால் சர்க்கரை நோயாளிகள் வருகின்றனர்.

### பின் விளைவுகள்:

சர்க்கரை நோயினால் ஏற்படும் பின் விளைவுகளை பெரிய ரத்தக் குழாய் பாதிப்பு, சிறிய ரத்தக் குழாய் பாதிப்பு என இருவகையாக பிரிக்கலாம். மூளைக்கு செல்லும் ரத்தக் குழாய் பாதிப்பினால் பக்கவாதம், இருதய ரத்தக் குழாய் அடைப்பினால் மாரடைப்பு மற்றும் கால்களுக்கு செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பு உண்டாகி, அதனால் ஏற்படும் புண் ஆறாமல் காலைத் துண்டித்தல் ஆகியவை பெரிய ரத்தக் குழாய் பாதிப்பினால் வரும் பின் விளைவுகள்.

கண்களில் உள்ள சிறிய ரத்தக் குழாய்கள் அடைபட்டு பார்வை இழப்பு, சிறுநீரக ரத்தக் குழாய் அடைப்பினால் சிறுநீரகம் செயலிழப்பு, கால் நரம்புகளுக்கு செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு கால் நரம்புகள் செயல் இழத்தல் ஆகியவை சிறிய ரத்தக் குழாயினால் ஏற்படும் விளைவுகள் ஆகும்.

மேற்கண்ட பின் விளைவுகளில் கால்களுக்கு செல்லும் ரத்தக் குழாய் அடைப்பினால் காலைத் துண்டித்தல் மற்றும் கால் நரம்புகள் பாதிக்கப்பட்டு உணர்ச்சியின்மை, எரிச்சல் இவை இரண்டும் சர்க்கரை நோயினால் கால்களில் ஏற்படும் பாதிப்புகளாக உள்ளன.

### பாத பராமரிப்பு மையம்:

இந்நோயினால் ஏற்படும் கால் இழப்பைத் தவிர்ப்பதற்காக உலக சர்க்கரை நோய் தினத்தில் பி.எஸ்.ஜி மருத்துவமனையில் சர்க்கரை நோய் பாத பராமரிப்பு மையத்தைத் தொடங்கியுள்ளோம். கால்களை ஆரோக்கியமாக வைத்து மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதும், கட்டுப்பாடற்ற சர்க்கரை நோயினால் ஒருவருக்கு கால் இழப்பு ஏற்படுவதைத் தடுப்பதும் இந்த மையத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

### செயல்பாடுகள்:

இந்த மையத்தில் ஆறு பேர் கொண்ட மருத்துவக் குழு செயல்படுகிறது. ஒரு சர்க்கரை நோயாளிக்கு காலில் புண் ஏற்படும் போது, பரிசோதனைகளின் முடிவின் அடிப்படையில், அந்த நபருக்கு எவ்விதமான சிகிச்சை வழங்கவேண்டும் என்பதை பாதவியல் நிபுணர்கள் குழு தீர்மானித்து சிகிச்சை வழங்கும்.

சர்க்கரை நோயாளிகள் அணியும் காலணிகள் இந்த மையத்தில் பிரத்தியேகமாக தயாரித்து வழங்கப்படுவதோடு, எவ்விடத்தில் புண் உள்ளதோ, அந்த இடத்தில் அதன் அழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும் காலணிகளில் மாற்றம் செய்து தரப்படும்.

சில சமயங்களில் சர்க்கரை நோயாளிகளுக்கு கால்களைத் துண்டிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. பி.எஸ்.ஜியில் இவர்களுக்காகவே செயற்கைக் கால் தயாரிக்கும் நிலையம் உள்ளது. இரண்டு அல்லது மூன்று வார காலத்திற்குப் பின்பு செயற்கைக் கால் அணிந்து தன் இயல்பான பணிகளை மேற்கொள்ளலாம்.

காலை இழந்து ஊனமுற்றோர் என்ற நிலையை அடையும் போது, அவருக்கு அதற்கான சான்றிதழை எங்கள் மருத்துவக் குழு வழங்குகிறது. இதன் மூலம் அரசு வழங்கும் பல சலுகைகளை பெற முடியும்.

### சிகிச்சை முறைகள்:

சர்க்கரை நோயாளிகள் அனைவரும் வருடத்திற்கு ஒருமுறை கால் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

அதிலும் பலவகையான பரிசோதனைகள் உள்ளன. முதலில் கால் ரத்தக் குழாயில் அடைப்பு உள்ளதா என்பதை கண்டறிய டாப்ளர் என்ற பரிசோதனை செய்யப்படுகிறது. இதில் அடைப்பு கண்டறியப்பட்டால் அதை கரைப்பதற்குரிய மருந்தும், அதற்குரிய பயிற்சிகளும் வழங்கப்படும். மேலும், அடைப்பு பெரிதாக இருந்தால் அறுவை சிகிச்சை செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இரண்டாவதாக இந்நோய் கொண்டவர்களின் காலில் உள்ள நரம்புகள் பழுதடைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதில் ஒரு பகுதியினருக்கு காலில் உணர்ச்சி இல்லாமல் இருக்கலாம் அல்லது கால்களில் எரிச்சல் போன்ற உணர்வு ஏற்படலாம். இவர்களின் கால் நரம்பு பாதிப்படைந்துள்ளதா என்பதைக் கண்டறியும் பரிசோதனையை வருடத்திற்கு ஒருமுறை செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, சர்க்கரை நோயினால் நரம்புகள் பாதிக்கப்படும் போது, பாதிப்பு ஏற்பட்டுள்ள இடத்தில் அழுத்தம் அதிகமாக இருக்கும். இந்த அழுத்தத்தைக் கருவி மூலம் கண்டறிந்து, அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் காலணிகளில் மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

நான்காவதாக சர்க்கரை நோயாளிக்கு பரிந்துரை செய்யும் காலணிகளின் மிருது தன்மை 15 என்ற எண்ணிற்குள் இருக்க வேண்டும். இதை கணக்கிடுவதற்கு டியூரா மீட்டர் என்ற கருவி உள்ளது. இதன் மூலம் சர்க்கரை நோயாளிகள் அணியும் காலணிகள் பொருத்தமானவையா என்பதையும் கண்டறிய முடியும்.

மேற்கூறிய அனைத்து சிகிச்சை முறைகளும் பி.எஸ்.ஜி மருத்துவமனையில் உள்ள சர்க்கரை நோய் பாத பராமரிப்பு மையத்தில் உள்ளன.

## வாழ்க்கை முறை மாற்றம் அவசியம்!

- டாக்டர் சரவணன், தலைவர், மருத்துவத் துறை, பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை



சர்க்கரை நோயினால் வரும் கால் பாதிப்புகளில் சிலருக்கு கால் எரிச்சல், மதமதப்பு போன்ற தொந்தரவுகள் முதல் அறிகுறியாக இருக்கும். சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இல்லாமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

கால் தோலில் நிறமாற்றம், தோலின் தன்மை மிகவும் தடிமனாக மாறுதல், சிலருக்கு காலை தரையில் வைக்கும் உணர்வே இல்லாமல் இருக்கும் தன்மையை முக்கியமான அறிகுறிகளாக கருத வேண்டும். மேலும் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை எடுக்க வேண்டும். அதிலும் நோயின் தன்மை மேலும் அதிகரிக்காமல் காலை அகற்றும் நிலைக்குச் செல்லாமல் இருப்பது முக்கியமான ஒன்று.

கால் நரம்பு மற்றும் ரத்தக் குழாய் பாதிப்பினால் கால் அகற்றப்பட்டு இருந்தால் அதற்கு உண்டான மருந்துகள், கொழுப்பு மற்றும் உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகள் போன்றவற்றைத் தொடர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் ரத்தக் குழாயில் ரத்த ஓட்டம் மற்றும் நரம்புகள் பிற பகுதிகளுக்கு அனுப்பும் சமிக்ஞைகள் சீராக இருக்கும். மேலும் ரத்தக் குழாயில் கொழுப்பு படியாதவாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

கால் நரம்பு மற்றும் ரத்த ஓட்டத்தில் பாதிப்பு ஏற்படுவதற்கு சர்க்கரை நோய் மட்டுமே காரணமாக இல்லாமல், ரத்த அழுத்தமும், கொழுப்பும் காரணமாக உள்ளது. எனவே இந்த மூன்றையும் கட்டுக்குள் வைக்க வேண்டும். இதன் மூலம் மீண்டும் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

இனிப்பைத் தவிர்த்து, கொழுப்பு மற்றும் உப்பு சத்து குறைவான உணவுகளை உண்ண வேண்டும். இதைத் தவிர கால்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும்.

நவம்பர் 14, சர்க்கரை நோய் தினம் அனுசரிப்பதற்கு முக்கிய காரணம் அதன் தீமைகள் மற்றும் பிரச்சினைகள் ஒருவரின் வாழ்வையும் அவரின் குடும்பத்தையும் எந்தளவு பாதிக்கும் என்பதைத் தெரியப் படுத்துவதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் இளம் தலைமுறையினரின் வாழ்வியல் முறையில் மாற்றம் அடைந்துள்ளதோடு உடல் உழைப்பு இல்லாத அலுவலகப் பணிகளை மட்டுமே செய்து வருகின்றனர். அதிலும் அவர்கள் உட்கொள்ளும் உணவு வகைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளன. தினமும் குறைந்தது 45 நிமிடம் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, மிதிவண்டி ஓட்டுதல் போன்ற விருப்பப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை, துரித உணவுகளைத் தவிர்த்தல் போன்றவை சர்க்கரை நோய் வரும் தன்மையை நிச்சயம் குறைக்கும். மேலும் குடும்பத்தில் சர்க்கரை நோய் வரக்கூடிய தன்மை கொண்ட ஜீன் இருந்தாலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்ந்தால் இந்நோய் வருவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது

## விரைந்து செயலாற்றுங்கள்!

- டாக்டர் இளங்கோ, நுண்துளை அறுவை சிகிச்சை நிபுணர்



உலகிலேயே இந்தியாவில் தான் சர்க்கரை நோயினால் கால் இழப்பு ஏற்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கால் இழப்பைத் தவிர்க்க, காலில் புண் வராமல் தடுப்பதே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உள்ளது.

நெடுநாளாக சர்க்கரை நோய் பாதித்தவர்கள் பிரத்தியேக காலணிகள், உணவு கட்டுப்பாடு, சர்க்கரை அளவு அதிகரிக்காமல் கட்டுக்குள் வைத்தல், ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் மருந்துகள் போன்றவற்றை பின்பற்றும் போது புண் ஏற்படாமல் தடுக்க முடியும். பெரும்பாலும் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருந்தால் புண் ஏற்படாது. ஆனால் ஒரு சிலருக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் புண் ஏற்பட்டு விடும்.

காலில் புண் ஏற்பட்டு விட்டால் நாம் தரும் மருந்துகள் ரத்த நாளம் மூலமாகவே புண்ணை அடைய முடியும். ரத்த ஓட்டம் தடைபட்டால் மருந்துகள் முழுமையாக புண்ணிற்கு போய் சேராமல் இருக்கும். நெடுநாள் சர்க்கரை நோய் உள்ளவர்கள், புகையிலை சார்ந்த பொருட்கள் பயன்படுத்துபவர்கள் போன்றவர்களுக்கு காலில் உள்ள ரத்த நாளங்களில் கொழுப்பு அல்லது சுண்ணாம்பு படிந்து அடைப்பு ஏற்படும்.

அந்த சமயத்தில் ஆஞ்சியோகிராம் செய்து ரத்த ஓட்டம் தடைபட்டுள்ள இடத்தையும், எத்தனை அடைப்புகள் ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறியலாம். அறுவை சிகிச்சை இல்லாமலேயே ஆஞ்சியோ பிளாஸ்ட்டி சிகிச்சை மூலம் இதனை சரி செய்யலாம். இதனால் ரத்த ஓட்டம் சீராகி புண் விரைவில் ஆறி விடும். பெரும்பாலும் 70 முதல் 80% நோயாளிகளுக்கு புண் ஏற்பட்டாலும் கால்களை அகற்றாமல் காப்பாற்றி விட முடியும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு காலில் புண் ஏற்பட்டு விட்டால் அதை உடனடியாக கவனத்தில் கொண்டு தாமதிக்காமல் மருத்துவரை அணுக வேண்டும். முதல் கட்டத்தில் உணவுக் கட்டுப்பாடு, *Regular dressings* மற்றும் மருந்து மாத்திரைகள் மூலமாக குணப்படுத்தி விடலாம். சற்று முற்றிய நிலையில் கூட ஆஞ்சியோபிளாஸ்ட்டி மூலம் ரத்த ஓட்டத்தை சரி செய்து விட முடியும். இதன் மூலம் காலை அகற்ற வேண்டிய நிலையில் இருந்து காப்பாற்றி விடலாம்.

## எதனால் புண் ஏற்படுகிறது?



- டாக்டர் ராஜேஷ்குமார், பேராசிரியர், அறுவை சிகிச்சைத் துறை

சர்க்கரை நோயாளிகளுக்கு காலில் புண் ஏற்பட்டு அதனால் காலை இழக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆனால் உடனடி மருத்துவக் கவனிப்பினால் இதனைத் தடுக்க முடியும்.

நீண்ட நாட்களாக சர்க்கரை வியாதி கட்டுப்பாடில்லாமல் இருக்கும்போது கால் நரம்புகளையும், ரத்தக் குழாயையும் பாதித்து காலில் உணர்ச்சி திறனைக் குறைத்து விடுகிறது. இதனால் ரத்த ஓட்டம் தடைபட்டு புண் ஆறுவதற்கான வாய்ப்பும் குறைகிறது.

இவ்வாறு உணர் திறன் குறைந்து, நோயாளி நீண்ட நேரம் ஒரே இடத்தில் நிற்கும் போது, உடலின் அழுத்தத்தைத் தாங்கக் கூடிய பகுதியில் புண் ஏற்பட்டு, ஆழமாக பரவி, எலும்பு வரை சென்று பாதிப்பை ஏற்படுத்தும் போது காலை இழப்பதற்கான வாய்ப்பு அதிகமாகின்றது.

சர்க்கரை நோயினால் புண் ஏற்பட்டு எங்களிடம் வரும் நோயாளிகளுக்கு ஆரம்ப நிலையில் ஆன்டிபயாடிக் கொடுக்கப்பட்டு புண் குணமாக்கப்படுகிறது. சிலருக்கு ரத்த ஓட்டம் குறைவாக இருக்கும்போது தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. ரத்த ஓட்டத்தை சீர் செய்வதற்கான சிகிச்சை முறைகள் உள்ளன. மிகவும் சிக்கலான தருணத்திலேயே கால்களை எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆரம்பத்திலே சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைத்தால் நரம்பு மற்றும் ரத்தக் குழாய் பாதிப்பைத் தடுக்க முடியும். மேலும் காலில் புண் ஏற்பட்டால் சுய மருத்துவத்தை மேற்கொள்ளாமல் விரைவில் மருத்துவரை அணுகுவதே சிறந்தது. ஒரு தனி மருத்துவக் குழுவுடன் இந்த சிகிச்சை முறைகளை மேற்கொள்ளும்போது அதை இன்னும் சிறப்புற செய்ய முடிகிறது.

## கால்களை எவ்வாறு பாதிக்கிறது?

- டாக்டர் செந்தில்குமார், சர்க்கரை நோய் நிபுணர்



ஒருவருக்கு நீண்ட நாள் சர்க்கரை நோய் இருந்து, புகைபிடிக்கும் பழக்கத்தையும் அவர் தொடர்ந்தால், ரத்தக் குழாயில் கொழுப்புக் கட்டிகள் அடைத்து விடும். அவ்வாறு அடைபடும்போது கால்களுக்கு ரத்த ஓட்டம் பாய்வது தடைபடுகிறது. இது போன்ற சமயங்களில் ஏதேனும் காயம் ஏற்பட்டுவிட்டால் குணமாகாமல் போவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே இந்நோய் உள்ளவர்கள் புகைபிடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நாட்பட்ட சர்க்கரை நோய் உள்ளவர்கள் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் கால் நரம்புகளைப் பாதித்து, காலில் உணர்வற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. அதனால் புண் ஏற்படும்போது அதை அவர்கள் உணர முடியாமல் போய்விடுகிறது. எனவே இந்த நோய் உள்ளவர்கள் காலில் ஏதேனும் புண் ஏற்பட்டுள்ளதா என்பதை அடிக்கடி கவனிக்க வேண்டும்.

சில நேரங்களில் காலில் உணர்வுகள் சரியாக இல்லாமல் இருக்கும்போது காலின் வடிவமைப்பே மாறிவிடும். ஆரம்ப நிலையிலே இதுபோன்ற பாதிப்புகளைக் கண்டறிந்து விட்டால் அதற்கான காலணிகளை அணிந்து வடிவம் மாறுவதைத் தடுக்கலாம். இந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்தாலே நரம்பு மற்றும் ரத்தக் குழாய் அடைப்பு ஏற்படுவதைத் தடுத்து விடலாம்.

# NGP CAS Principal ranked among 2% of global scientists

The Covai Mail

Elsevier BV and Stanford University, USA has released the list of top 2% scientists in the world for the year 2020. Their research publications till 2020 on the basis of standardized citation indicators are considered for the global ranking.



Professor V.Rajendran, Principal, Dr. N.G. P. Arts and Science College, Coimbatore was ranked among the top 2% of the world scientists in the field of Material Science by the Elsevier BV and Standford University, USA in October 19, 2021 based on the standardized information on citations, different authorship positions, h-index, citations to papers in composite indicator.

The Chairman of Kovai Medical Center Research and Educational Trust, Dr. Nalla. G. Palaniswami and the Secretary, Dr.Thavamani D. Palaniswami, of Dr. N.G.P. Arts and Science College, Coimbatore felicitated him for having ranked among top 2% world scientists.

# Great opportunities in sports unlocked for Pioneer Students



*Raman Vijayan coaching the students of Pioneer Institutions.*

The Covai Mail

The CRV Sports Academy from Pioneer Trust has joined hands with Raman Vijayan Soccer School (RVSS) to conduct free Football Training Camp for students of Pioneer Educational Institutions.

Former Indian footballer Raman Vijayan, who is also the Founder-Director of RVSS and Noble Foundation is providing Coaching during this camp which started on November 9 and will continue till November 23. The camp is being held at Pioneer School and College premises in the mornings and evenings.

Mr.Vijayan is one of the superstars of Indian football history, and he is renowned for scoring 10 goals in 18 matches during the 1997–98 NFL season. He is just one of the two Indian footballers to achieve such a feat.

Regarding this collaboration, Mr.Vijayan said " I visited the campus 2 months ago. Both the college and school are in the same campus, and I found the sports facility to be good. I spoke with the Managing Trustee of Pioneer Trust, Ms.Aparna about making something remarkable in sports for the students."

"Being a tremendous sportsperson, and coming from a sports family, she knows the incredible opportunities that sports could unlock for children and young college students. So we thought of going for a collaboration. Initially this camp is arranged to create football awareness among students of the Pioneer Institutions. I thought a handful of students would arrive at the camp but to my surprise and joy, more than 100 students turned up. 40 of them are girls. The enthusiasm is phenomenal here and this is what we need."

Mr.Vijayan and his team shared that these students have to be taught from the scratch, and his team is doing that in these camps. There is a plan to set up a good boys and girls football team at Pioneer, and that is the long-term plan of this partnership. Regarding the performance of the aspirants at the camp, he said " the students here are quick learners, passionate and punctual. That's a good start for us. This is really going to be a very good opportunity for them."

Aparna Rajkumar, Managing Trustee of Pioneer Trust said that she is extremely glad to note that her students have shown immense interest to take part in sports, especially football.

She conveyed that though rains visit the camp occasionally, the football ground that was made several decades ago under the supervision of C.R.Visswanathan, the former Vice President of All India Football Federation and Former President of Tamilnadu Football Federation remains perfect to be of complete use for practicing and playing during this camp.

She further shared that in the near future, many sports achievements will come from Pioneer Institutions and Jothipuram region.

She said that sports gives students the opportunity to excel in ways they have not known before. She added that in the coming months, measures to provide coaching in multiple-sports will be taken by the Trust.

***Photo : Sathis Babu***

# Bharatanatyam is a Divine & Delightful Devotion!

***Mrudula Rai, Founder, Shree Natya Niketan***

The Covai Mail

While it is definitely a herculean task to fathom the entire greatness of India in just a day, it is possible to relish its richness through its arts in an hour.

Among many cherished Indian art-forms, Bharatanatyam holds a special place in the heart of millions of Indians for its sublimity. It certainly has inspired people in all four hemispheres.

If we look at Bharatanatyam in Coimbatore, it is not easy to pass-by without admiring the incredible work Shree Natya Niketan has done here for the past 25 years.

Founded by Mrudula Rai, the disciple of Ullal Mohan Kumar and Shobana Balachander, Shree Natya Niketan has come a long way from starting with 2 students, to teaching hundreds of students and creating 20 gurus.

Recently the school held its 55th Arangetram in a grand manner, and it featured performance of Ms.Soundarya Chengkathir, a disciple of Mrudula.



*Mrudula Rai*

When asked what Bharatnatyam means to her, the teacher said "Bharatanatyam is a form of prayer to me. I see it as a direct way to connect with my God Nataraja."

While it would be every Bharatanatyam dancer's dream to shine like a Star, Mrudula decided to burn like a Sun and help raise a generation of artists with passion towards the form.

When she started her school here, it had around just 2 to 3 students. Today more than 400 students learn from her. This also includes 10-12 students from Corporation schools. "This art has inspired people from all walks of life. The kids of today exhibit great love towards it, and learn passionately."

"Throughout the years, my intention to teach Bharatanatyam has remained the same – I wish to take it to places, far and wide. I admire the greatness of India, and Bharatnatyam teaches the learners about our history and epics. Though India was invaded by many foreign nations and many changes ensued, the greatness of it could not be robbed. India's greatness lies in its arts too. Today the whole world loves to learn Bharatanatyam. There are 500 dance schools in Switzerland, hundreds in US, many in Australia and great many in the other parts of the world."

"What I consider to be the crowning achievement of my 25 years of teaching this divine art is, many of my students have taken it as their profession. They are in Tamil Nadu, Jaipur, Dubai, and many other regions. Most of them are Ph.D holders, Engineers, PG degree holders. This dance's sublimity has given them a hope that it could be taken as a profession. I see my students teach this art with dedication and love, and they are fostering a new generation, of which I am immensely proud."

Mrudula also added that parents of her students have credited this art for bringing a great boost and shape in their children's personality.

This 25 years is a splendid start of a grand Journey, and Shree Natya Niketan definitely has miles to go.

Soundarya Chengkathir, shared "I was quite nervous first when I started practicing. It is because of the guidance from my guru, I was able to perform well with grace under pressure at the arangetram. All credits to her and to my family."



*Soundarya Chengkathir during the arangetram.*

To ADVERTISE IN THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

# Let Happiness prevail in every child's life!

***- National Model Schools***

The Covai Mail

While we normally consider Children to be gifts and cherish them for their sweetness every now and then, Children's Day remains a special day in India to celebrate God's little angels.

Besides upskilling and bringing out the best in every child, National Model Schools in Coimbatore and Kotagiri are well-known for being student-centric educational institutions.


It was fascinating to know that like the Teachers, Principals and Management of the institutions, the seniors also find their juniors to be members of One Big Family. When the school re-opened this year, the seniors were early to the classes, so that they could welcome their juniors, even though most of them were new to them.

It is evident that there is a strong bond that runs through the schools' system, which makes every student of this institution to be well connected with all the other students and teachers.

The Principals of the four National Model Institutions - R.Baby, Principal of National Model Matric Hr.Sec School, D.Geetha, Principal of National Model Senior Secondary School, N.Banumathi, Principal of National Model School,Westbrook, Kotagiri & N.Pradeepa, Principal of Origami concept School, shared what kind of plans they have made for their children for this year's Children's Day.

The four Principals shared that they have planned for indoor celebrations this year, adhering to SOP but there will be no absence of joy and laughter even though the usual level of celebrations would not be there. The Principals added that students can participate in drawing, dance, oration, and also bring to the front about any activity during this celebration; only their imagination is the limit.

They shared that like parents, they too wish that their students and every child should find joy and happiness, learn life-long, take life-lessons, develop curiosity, independence and confidence, contribute to society and thrive globally.




## Ladies Circle launches unique center

The Covai Mail

With the help of funds raised by Ladies Circle Switzerland, Coimbatore City Ladies Circle 16 set up and inaugurated their Crimson Unit at Santhippom Welfare Society, Tiruppur recently.

Project Crimson by Ladies Circle India is an Endeavour to set up sanitary napkin manufacturing units across India with a vision to empower women with a means of livelihood and making affordable sanitary hygiene available. It was adopted as the International Service Project 2019-2021 by Ladies Circle International.

Project Crimson aims to provide empowerment to HIV positive and disenfranchised women from remote sections of society while at the same time addressing the problem of period poverty.

The Crimson unit was inaugurated in the presence of National President, Ladies circle India Cr. Swapna Rajesh, Area 7 Ladies circle chairperson Cr. Priyanka Saberwal, past National President Nidhi Gupta, National Advisor for Project Crimson Rohini Sivalingam, Chairperson of Ladies circle 16 Cr. Pallavi Bafna and trustees of Santhippom welfare society.

## SRCW widens facilities to improve students' creativity



*D.Lakshminarayanaswamy, Managing Trustee, SNR Sons Charitable Trust and Principal K.Chitra (Right) with the MoU. Also seen is Prof.Anandhi, Head, Department of English.*

The Covai Mail

Writing is an art that tastes sweeter when it is penned with care and creativity. With a view to nourish their students with the above said traits, Sri Ramakrishna College of Arts and Science for Women (SRCW) signed MoUs with two reputed skill development companies recently.

A press release from SRCW mentioned that a collaboration has been officially made with 'Henry Harvin Education' an International firm for training students on Content Writing & Editing and 'The Writers Cosmos' an organization recognized by MSME for E-publishing & Internship for budding writers.

The Managing Trustee of SNR Sons Charitable Trust D.Lakshminarayanaswamy and the Principal of SRCW K.Chitra signed the MoUs. Prof.Anandhi, Head, Department of English at SRCW was present at the event.

The press release stated that both firms agreed to conduct Internships and Technical training sessions for the students to enhance their skills in communication and all other skills needed for future endeavors. Sessions on Content writing, publications will be held as a part of the understanding between the organisations, the release said.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

# Solve Problems and **Move Forward!**

## *- Buddha Chandrasekhar, CCO, AICTE at SNS Institutions' Induction Program*

David Karunakaran
The Covai Mail

Engineering is a remarkable field that can produce innovators with ideas that can change the world. But before students of engineering could become brilliant minds, their raw strength and flamboyant personality needs to be groomed to help them become truly special.

Collegiate period could act as both the cradle and crucible of transformation, and on the very first day of their college, the freshmen of SNS College of Engineering and SNS College of Technology were given incredible introduction to the world of Engineering and the pros of studying at SNS Institutions.

Both colleges jointly organized an Induction Program for the first year students of the colleges, recently.

More than 2500 freshmen of the colleges participated in this event along with their parents, to know about the college and the promises Engineering holds for the future. Buddha Chandrasekhar, Chief Coordinating Officer, AICTE was the Chief Guest. Maya Sreekumar, Senior VP of Human Resources, Cognizant and Chetan Korada, Indian Racing icon were the Guests of Honor. S.Nalin Vimal Kumar, Technical Director, V.P.Arunachalam, Director, SNS Institutions, S. Chenthur Pandian, Principal, SNS CT, S.Charles, Principal, SNS CE were present at the program.

**"There are many Indians working in Silicon Valley (the home to dozens of major technology, software, and internet companies), and all of the students of today can find their place there if they properly utilize their time here."** *- S. N. Subramanian.*

## You can shine like **Superstars!**


S.N. Subramanian, the Chairman of Sri SNS Charitable Trust said Engineering education was taking a backseat for quite some time in the past. While its glow was dimming, it was the incredible role played by Technocrats like today's Guest of Honor Maya Sreekumar, Academicians like the Chief Guest Buddha Chandrasekhar and other Visionaries that helped it reclaim its glam in Indian academic arena.

He expressed that opportunities for Engineering graduates are immense; they can become technocrats, entrepreneurs, innovators, academicians, government servants, sports stars, creative writers, and even become excellent politicians like PM Narendra Modi and solve challenges that the country is facing.

He wanted them to know that Technology is upgrading every day, and students will have to keep themselves updated to achieve their goals. "Our teachers will be on the task of educating you with the required caliber of skill sets", he said.

It was conveyed that the engineering courses presented before the students at SNS Engineering Institutions are all most sought after programs by engineering aspirants everywhere, and the college also caters to the current and long term needs of learners using their Design Thinking Framework (which is framed with the assistance of leading IT giants like TCS, Cognizant, Tech Mahindra, Wipro, Accenture, etc.)

He shared that academic nourishment will be provided to every student, wholly and the college only wants the students to master the technology, develop good communication skills, focus on studies and equip themselves to meet the challenges of tomorrow. The Chairman also highlighted that there are many Indians working in Silicon Valley (the home to dozens of major technology, software, and internet companies), and all of the students of today can find their place there if they properly utilize their time here.



**- S. N. Subramanian,** *Chairman, Sri SNS Charitable Trust*

## Transfer knowledge into **real-life experience**

**– Buddha Chandrasekhar,** *CCO, AICTE*



Speaking about Tamil Nadu, the AICTE's Chief Coordinating Officer pointed out that the early navigations systems were invented during the reign of Raja Raja Chola, and called this State as a land of great ancient knowledge.

Talking about India and its potential, he expressed that Indians have the mindset to provide solutions to every problems. "Every day we see hundreds of problems in life, we will solve it and we will move forward", he said.

He drew the attention of the audience to the fact that earlier investments used to only be made on IT Sector, KPOs, BPOs but now investments in Indian automobile sector, railways, infrastructure sector have been arriving more. Millions and Billions of USD worth investment have been made in India, and it will the engineers of tomorrow who will provide the support system to make the investments convert as services. In the next 4 years, 10 crore job opportunities will be created and that will lead to 40 crore indirect opportunities.

Talking about how the Central Government and AICTE have been taking steps to unlock knowledge for all, he shared about the Project Udaan which aims to translate textbooks resources with the entire engineering and medical curriculum to many Indian languages using Artificial Intelligence and Machine Learning, so that the students who study in non-English medium schools would not find language as a barrier to acquiring knowledge in their higher education pursuit.

He also shared about National Educational Alliance for Technology (NEAT) model through which even the complicated concepts are made easy to every reader in a personalized and customized manner. Its prime goal is to help students get strong in concepts and subject that remained a huge challenge for them.

Regarding the facilitation of interaction with industry, AICTE has opened its dedicated Internship Portal where students can work virtually or physically for top class companies. In last one year alone 12 lakh internship opportunities have been provided and more than 30,000 companies have registered with AICTE to provide internship opportunities to all engineering streams. He said that transfer of knowledge gained in college to real-life experience is possible when students attach themselves with industries of repute, and he appealed to the students of SNS Institutions to register in the portal and make use of the opportunity.

## Everything needs **Engineering**

**- Chetan Korada,** *Indian Racing Icon*



The Guest of Honor Chetan Korada, who is an Indian Racing Driver, urged the students to start working for the future from their first day as a college student. "When many people asked me 'When did you start your company Quest Motorsports?', I don't tell them I started in February (2021), I tell them I started in 2007- the day I started Racing. That's what I tell all the students; this is the year you start building who you are going to be in the future." "It is all in your hands to become a 'Somebody' instead of becoming a 'Nobody'".

Chetan is the first in Asia and second in the Entire world, to participate and even to win in a moto-racing championship using prosthesis leg. Though he had faced a major physical challenge, he conquered not only that but contested boldly in the high octane Motosports world and won accolades.

He conveyed to the students that Motosports world is a complicated and sophisticated industry where the work of the driver is just 40% and the rest is all about team work, esp. the work made by engineers has a phenomenal part.

Engineers are the ones who design cars, do research & development on car's performance, monitor the cars' and drivers' performance, collect data on their efficiency and work on how to make them even better. He said his company, in its debut year, has been able to pull out remarkable results and that became possible because of the engineers.

Not just Racing, everything needs engineering, he expressed. He wanted the students to make use of the opportunities presented at SNS Institutions and build long lasting, successful careers.

## Develop clarity about career **right now**

**- Maya Sreekumar,** *Senior VP of Human Resources, Cognizant*

Maya shared that more than 200 students who will graduate in 2022 from SNS Institutions have already got placed at Cognizant. She assured the freshmen that job-opportunities are available in abundance for them. She conveyed that just one tech-giant in India hires in tens of thousands freshers every year, and asked them to imagine the quantum of opportunities available as a whole for freshers. At the same time she told that a sizeable portion of these new recruits in many companies quit after serving it for a year.

This happens because they don't fix on what they like to become. Maya wanted the students to develop clarity about what they like to do with their courses and be precise about their career right from the start of their college education.

Stating that Skill is the Currency in today's world, she wanted the students to invest some time in developing technical skills every six months. She said that every 5 years of technological advancement creates changes worth 5 decades in the world.

As technology is transforming the businesses on a global scale, she appealed to the students to build skills that they like, apart from academics, join online skill development platforms Udemy, Coursera, Edx etc., enhance their caliber and repeat the process. She clarified that even developing one's knowledge about wellness and creativity are vital and considered skills. "College education is not about getting 80-90% in marks but identifying problems and identifying solutions to problems via skill", she emphasized.

She also threw light on why it is important to Unlearn some of the methods, ideas, styles and content one has followed, and Relearn how better the same process is done today & upskill. "When you are thinking of the future, you have to be relevant to the future,today. It is not about preparing for future,tomorrow"

Addressing the girls, she asked them to not take up jobs just to give up on them after a short while when life-changing event like marriage and childbirth. "Develop determination to go through challenges. Don't give up your career." Finally she urged all of them to develop gratitude to community and help it grow and make it proud by working together with a common goal -To make India a better nation.



## TVS Chairman honored with Padma Bhushan



The Covai Mail

Venu Srinivasan, Chairman, TVS Motor Company, was presented the prestigious Padma Bhushan Award by the President of India, Ram Nath Kovind, at the Rashtrapati Bhavan on Tuesday.

Venu took over as the CEO of Sundaram-Clayton, the holding Company of TVS Motor, in 1979. In the same year, TVS Motor Company was born, and under Venu Srinivasan's persistent and diligent work, grew to be the third largest two-wheeler manufacturing unit in India. Hard work, persistence and self-belief maketh the man Venu Srinivasan. He began his career as a mechanic in his own garage during vacations and put in long, gruelling hours of preparation for his task ahead. With the success of TVS, he has demonstrated that an Indian company can grow to be a company of global quality and recognition and manufacture products which would match or even exceed the best in the world by adopting the right work ethos and successful work culture.

## EKKI launches Water-Tech Centre at KPR Institutions



*K.P.Ramaswamy, Chairman, KPR Groups, A.M.Natarajan, CE, KPRIET, P.Arumugam, Chief Executive, EKKI Pumps, Karin Stoll, German Consul, Kanishka Arumugam, Co CEO, EKKI Pumps at the inaugural.*

The Covai Mail

Pumps and Water Technology major EKKI teamed up with KPR Institutions to launch 'The EKKI-KPR International Water Technology Centre (EIWTC)', the first of its kind in the Indian Pump & Water Industry.

The Centre will lead on the exchange of best practice in teaching and research for the pump industry and water related technologies. EIWTC brings together pumps and water related Research, Teaching, Consultancy, and Entrepreneurship.

Based at the KPR Institutions, the new Centre will harness the combined expertise of 45+ researchers and academicians from KPR and 40+ engineers from EKKI. The new centre will initially work on "SKE"– Skill Training, Knowledge transfer and Encourage Entrepreneurship in the water industry.

It was inaugurated by German Consul General, Karin Stoll on Friday in Coimbatore in the presence of K. P. Ramasamy, Chairman and T.N. Arun, Executive Director, KPR Groups, P. Arumugam, Chief Executive and Kanishka Arumugam, Co-CEO, EKKI Pumps, A. M. Natarajan, Chief Executive and M. Akila, Principal, KPRIET.

# அறுவை சிகிச்சை பயமா?

## நம்பிக்கை ஏற்படுத்தும் இன்டெர் வெண்ஷனல் ரேடியாலஜி

தி கோவை மெயில்

உலக கதிரியக்கவியல் தினத்தை முன்னிட்டு பி.எஸ்.ஜி மருத்துவமனையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'கதிரியக்கவியல் தினம்' அனுசரிக்கப்பட்டது. எக்ஸ் ரே கண்டறியப்பட்ட தினமான நவம்பர் 8 ம் தேதி உலக கதிரியக்கவியல் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி என்பதை மையமாகக் கொண்டு கடைபிடிக்கப்படுகிறது.

ரேடியாலஜி துறையின் கீழ் வரும் மற்றுமொரு பிரிவான இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி மூலமாக அறுவை சிகிச்சையின்றி சிறிய ஊசி மூலமாக நுண்துளை ஏற்படுத்தப்பட்டு நோய் குணமாக்கப்படுகின்றது. பக்கவாதத்தால் ஏற்படும் ரத்தக் குழாய் அடைப்பு, சர்க்கரை நோயினால் ஏற்படும் புண், வெரிக்கோஸ் நரம்பு சுருள் போன்ற நோய்கள்அறுவை சிகிச்சை இல்லாமல் சரி செய்யப்படுகின்றன.

மேலும், பி.எஸ்.ஜி மருத்துவமனையில் இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி மூலம் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளி குறித்தும், இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி மருத்துவர்கள் கூறியதாவது:



### உயரும் வாழ்நாள்

டாக்டர் **இளங்கோ,** நுண்துளை ரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணர்



எங்களிடம் சிகிச்சைக்கு வந்தவருக்கு வயிற்றில் இருக்கும் மிகப்பெரிய ரத்தக் குழாயில் வீக்கமும், இடது காலுக்கு செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பும் இருந்தது.

முதலில் ரத்தக் குழாயில் உள்ள வீக்கத்தை சரி செய்வதற்காக சிறிய ஊசி மூலமாக ரத்தக் குழாய்க்குள் **Stent Graft** கருவியைப் பொருத்தினோம். அதன் மூலம் ரத்த ஓட்டம் சீராகும். இதனால் வீக்கம் ஏற்பட்டுள்ள பகுதி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும்.

இடது காலுக்குச் செல்லும் ரத்தக் குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பைச் சரி செய்வதற்காக வலது காலில் உள்ள ரத்த ஓட்டத்தை இடது காலுக்கு எடுத்து வரக் கூடிய வகையில் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதன் மூலம் இடது காலுக்கு தடைப்பட்ட ரத்த ஓட்டம் மீண்டும் சீராகும். இந்த இரண்டு சிகிச்சை முறைகளும் ஒரே நேரத்தில் செய்யப்பட்டன.

நோயாளி உடற்பருமன் கொண்டவராக இருந்ததோடு, நுரையீரல் தொடர்பான பிரச்சினையும் இருந்ததால் அறுவை சிகிச்சை செய்வது சிக்கலானது. ஒரே சிகிச்சை முறையாக இல்லாமல் தனித் தனியாக பிரித்து வழங்கப்பட்டது. இப்பொழுது நோயாளி நலமாக உள்ளார்.

"முன்பெல்லாம் நோயாளிக்கு என்ன பிரச்சினை என்பதைக் கண்டறிவதே சவாலானதாக இருக்கும். ஆனால் இப்போதுள்ள எக்ஸ் ரே, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எம்.ஆர்.ஐ போன்ற கருவிகளின் மூலம் என்ன தொந்தரவு என்பதைத் துல்லியமாக கண்டறிய முடிகிறது"

பெருந்தொற்றின் போது நோயாளியின் நுரையீரல் எந்தளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய சி.டி.ஸ்கேன் கருவியே பெருமளவில் உதவியது. தலை முதல் கால் வரை உள்ள பல நோய்களுக்கு இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி மூலமாக குணப்படுத்தி நோயாளியின் வாழ்நாள் தரத்தை முன்னேற்ற முடியும்.

### கட்டுப்பாடு அவசியம்

டாக்டர் **முருகேசன்,** தலைமை மருத்துவர், கார்டியோ தொராசிக் & வாஸ்குலார் சர்ஜரி



ரத்தக் குழாயில் ஒரு பகுதி மட்டும் அசாதாரணமாக தளர்ந்தால் அதனை அனீரிசம் (மகாதமனி ரத்தக் குழாய் தளர்ச்சி என்கிறோம்). ரத்த அழுத்தம், புகைப் பழக்கம், வயது மூப்பு போன்ற காரணங்களால் ரத்தக் குழாயில் குறிப்பிட்ட பகுதி தளர்ந்து விடும். இந்த தளர்ச்சி பெரும்பாலும் 80% மகாதமனியில் ஏற்படும். அதிலும் சிறுநீரக ரத்தக் குழாயின் கீழ் இருக்கும் பகுதி அதிகம் பாதிக்கப்படுகிறது. இதனை **Abdominal Aortic Aneurysm** எனக் கூறுவோம்.

இதனால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பதால் திறந்த அறுவை சிகிச்சை செய்வது சிக்கலானதாக இருக்கும். இதுபோன்ற சமயங்களில் நுண்துளை சிகிச்சை **(Interventional)** அளிக்கலாம்.

ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது, புகைப் பழக்கத்தைத் தவிர்த்தல், அதிகமான வேலைப்பளு மற்றும் மன அழுத்தம் இல்லமால் இருப்பது போன்றவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### உரிய நேரத்தில் சிகிச்சை

டாக்டர் **அனந்த நாராயணன்,** இருதயம் மற்றும் ரத்தக் குழாய் அறுவை சிகிச்சை நிபுணர்



இந்த நோயாளிக்கு சிக்கலான ரத்தக் குழாய் தொந்தரவு இருந்தது. ஹைபிரிட் டிரீட்மென்ட் முறையை வழங்கினோம். ரத்தக் குழாய் தொடர்பான நோய்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. மாரடைப்பு நோய்க்கான அறிகுறிகள் விரைவில் தெரிய வருவது போல, ரத்தக் குழாய் தொடர்பான தொந்தரவுகள் சீக்கிரம் தெரிய வராது.

இதுபோன்ற நோய்கள் படிப்படியாகவே அதன் பாதிப்பைக் காட்டுவதால், இதை உரிய நேரத்தில் கண்டறிந்து சரியான மருத்துவ சிகிச்சையை வழங்கினால், பெரிய பாதிப்புகளைத் தவிர்க்க முடியும். நோயின் தன்மை சிக்கலான பின் மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்த்து உரிய நேரத்தில் சிகிச்சைக்கு வரவேண்டும்.

பி.எஸ்.ஜி மருத்துவமனையில் ரத்தக் குழாய் சிகிச்சை முறைகளுக்கென விரிவான சிகிச்சைத் திட்டங்களும், சிறந்த மருத்துவக் குழுவினரும் உள்ளனர். இன்றைய காலகட்டத்தில் மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களால் இது போன்ற சிகிச்சைகளை எளிமையாகவும், பாதுகாப்பாகவும் செய்ய முடிகிறது.

# மழை நீர் சேகரிப்புத் திட்டம்

தி கோவை மெயில்

கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் என்.எஸ்.எஸ், யூ.பி.ஏ மற்றும் எஸ்.ஏ.பி அமைப்பின் தன்னார்வலர்கள் மற்றும் அரசூர் ஊராட்சியும் இணைந்து அரசூர் ஊராட்சி நூலகத்தில் மழைநீர் சேகரிக்கும் குழிகள் மற்றும் தொட்டிகள் அமைத்து கொடுத்துள்ளது.

இதன் மூலம் நூலகத்தின் மேற்கூரையிலிருந்து வெளியேறும் மழைநீர் வீணாகாமல் சேமித்து நிலத்தடி நீர் மேம்படுத்தப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் அகிலா தலைமை வகித்தார். அரசூர் கிராமத்தின் தலைவர் கோவிந்தராஜ், அனைத்து தன்னார்வலர்களும் கிராமத்தின் அனைத்து சமூக தேவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் தங்கள் கிராமத்தில் அறுவடைக் குழிகளை அமைத்த ழிஷிஷி, ஹிங்கி மற்றும் ஷிகிறி நிறுவனங்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியில் உதவி வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர் உள்ளிட்டோர் உடனிருந்தனர். உதவி மண்டல ஒருங்கிணைப்பாளர் ஹிங்கி ஜிழிகிஹி, பாலாஜி மழைநீர் அறுவடைக் குழிகளை அமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

### ஹோம்லேன் வீட்டு உள் அலங்கார நிறுவனம்

# கோவையில் தொடக்கம்

தி கோவை மெயில்

வீட்டு உள் அலங்காரத்தில் தேர்வு பெற்ற ஹோம்லேன் கம்பெனி, தனது விரிவாக்க நடவடிக்கையாக கோவையில் முதலாவது அனுபவ மையத்தை தொடங்கியுள்ளது.

கோவையில் 2500 சதுரடியில் அமைந்துள்ள ஹோம்லேன் அனுபவ மையம், வாடிக்கையாளர்கள் பலவிதமான வீட்டு அமைப்புகள், வடிவமைப்புகள் உள்ளிட்டவைகளை நிபுணத்துவம் கொண்டவர்களைக் கொண்டு உருவாக்கி, வழங்குகிறது. சந்தையில் ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொள்பவர்களையும், விரும்பிய வகையில் அமைக்கவும், அதிக செலவில்லாத வகையில் அலங்காரங்களை மேற்கொள்ளவும், குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகின்றனர்.

ஹோம்லேன் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியுமான தனுஜ் சவுத்ரி, இந்தியாவில் 10 இரண்டாம் நிலை நகரில் முன்னணியில் உள்ள கோவையில், ரியல் எஸ்டேட் முதலீடுகள் அதிகமாக உள்ளது என்றார்.

கோவை கிளையின் வணிக தலைவர் மகேஷ் சிங் புதிய ஸ்டுடியோவை துவக்கி வைத்து பேசுகையில், "எங்களுக்கு கோவை விருப்பமான சந்தையாக உள்ளது. உள்ளூர் மக்களின் விருப்பம் மட்டுமின்றி, கோவையில் உள்ள வீடுகளில் முதலீடு செய்யும் வெளிநாட்டினருக்கும் சிறந்த தீர்வுகளை அளிக்கிறோம். எங்களது, 3டி பரிமாணத்துடன் காட்சிகளை, மெய்நிகர் முறையில் அமைத்து காட்டுகிறோம். ஏற்கனவே நாங்கள் துபாய், சிங்கப்பூர் மற்றும் தென்னாப்பிரிக்காவில் உள்ள வீட்டு உரிமையாளர்களை அணுகியுள்ளோம்," என்றார்.

### மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள்

தி கோவை மெயில்

சென்னையில் இடைவிடாத மழை பெய்து எங்கும் வெள்ளக் காடாக இருக்கிறது. மேலும் தமிழகம் முழுவதும் மழை குறித்த எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. அதன் தொடர்பாக கோவையிலும் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரில் இந்த விடுமுறை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நவம்பர் 10 அன்று காலை 6 மணிக்கு அறிவித்திருந்தால் பள்ளிக்குச் செல்லக் கூடிய குழந்தைகள், டிரைவர்கள், தாய்மார்கள் போன்றவர்கள் அதற்கு ஏப சரியாக திட்டமிட்டு வீட்டிலேயே இருந்திருப்பார்கள். சிக்கல் இருந்து இருக்காது. காலை 8.20 மணி அளவில் இந்த அறிவிப்பு வந்த பொழுது பெரும்பாலான மாணவர்கள் பள்ளிக்குச் சென்று விட்டார்கள். அறிவிப்பு வந்த பிறகு எல்லா பகுதிகளிலும் பள்ளியைச் சுற்றியுள்ள இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஏராளமான பெட்ரோல் விரயம், ஏராளமான மனிதர்களுடைய மனித ஆற்றல் வீணானது, குழந்தைகள், பெற்றோர்கள், டிரைவர், ஆசிரியர், பள்ளி நிர்வாகம் என்று அனைவருக்கும் குழப்பம்? இந்த சிக்கல்களையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எப்படியும் விடுமுறை அறிவிக்கப் போகிறோம் என்ற பொழுது அதை சரியான முறையில் முன்பே திட்டமிட்டு செய்திருக்கலாம். ஒரே ஒரு முடிவு அத்தனை பேருக்கும் சிரமம் இல்லாமல் செய்து இருக்கும். அதுவும் மாவட்ட ஆட்சித்தலைவர் போன்ற உயர் பதவியில் இருப்பவர்கள் இது போன்ற சமயங்களில் சிந்தித்து செயல்படுவது மக்களுக்கு பல வகையிலும் உதவிகரமாக இருக்கும்.

# குழந்தை வளர்ப்பென்ன சவாலா?

**வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒரு குழந்தைக்கு நீங்கள் எதைக் கற்றுக்கொடுத்து விட முடியும்? பிழைப்புக்கு என்று சில தந்திரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உலகோடு உங்களுக்கு இருக்கும் தொடர்பு காரணமாக, அந்தத் தந்திரங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.**

தி கோவை மெயில்

இன்றைய நாட்களில் அதிகமாக பேசப்படும் சில விஷயங்களில் குழந்தை வளர்ப்பும் ஒன்று. பத்து பிள்ளை பெற்றாலும் குழந்தைகளை அசாதாரணமாய் வளர்த்த இந்த கலாச்சாரத்தில், இன்றோ குழந்தை வளர்ப்பு நம்மைப் பாடாய் படுத்துகிறது. குழந்தையும் படுத்துகிறது! கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கிறார்கள் பலர். என்ன செய்வது? சத்குரு சொல்கிறார்...

**சத்குரு:**

லட்சிய மனிதர்களாக உங்கள் குழந்தைகளை உருவாக்குவது எப்படி என்கிற கேள்வி உங்களுக்குள் எழலாம். முதலில் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிறந்த குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல, உங்கள் மூலமாக வந்திருக்கிறார்கள். அது உங்களுக்குத் தரப்பட்ட பெருமையே தவிர,



அதனை ஒரு உரிமையாக நீங்கள் கருதக் கூடாது. அவர்கள் உங்கள் உடைமைகளும் அல்ல!

குழந்தைகள் வளர்கிற போது பெரும்பாலான பெற்றோர்கள் அவர்களுக்கு எதையாவது கற்றுத்தர வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால், உங்கள் குழந்தைகளோடு முதலில் உங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். யார் அதிக ஆனந்தமாக இருக்கிறீர்கள், நீங்களா... உங்கள் குழந்தைகளா? உங்களைவிட உங்கள் குழந்தை ஆனந்தமாக இருக்கிறது என்றால், வாழ்க்கைக்கு ஆலோசகராக இருக்கிற தகுதி குழந்தைக்குத்தானே இருக்கிறது!

ஒரு குழந்தை பிறக்கிறது என்றால், அது கற்றுக்கொடுப்பதற்கான நேரம் அல்ல, நீங்கள் கற்றுக் கொள்வதற்கான நேரம். நீங்கள் எப்படிச் சிரிப்பது என்பதையே மறந்துவிட்டீர்கள், எப்படி விளையாடுவது என்பதையும் மறந்துவிட்டீர்கள். ஒரு குழந்தை வருகிறபோது, இவற்றை நீங்கள் மறுபடியும் கற்றுக்கொண்டு அற்புதமான மனிதராக மலரலாம். மாறாக, மனிதர்கள் குழந்தைகளைப் பெரியவர்கள்போல நடந்து கொள்ள வைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். வாழ்க்கையை நீங்கள் புரிந்துகொண்ட விதங்களில் உங்கள் குழந்தைகளை வளர்க்க முற்படாதீர்கள். அவர்கள் என்னவாக வேண்டுமோ, அப்படி ஆகட்டும்!

வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒரு குழந்தைக்கு நீங்கள் எதைக் கற்றுக்கொடுத்துவிட முடியும்? பிழைப்புக்கு என்று சில தந்திரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உலகோடு உங்களுக்கு இருக்கும் தொடர்பு காரணமாக, அந்தத் தந்திரங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், அவை உங்களை எந்த விதத்திலும் வாழ்க்கைக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்க்கவில்லை. உங்களை விட உங்கள் குழந்தை, வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது.

அதற்குக் கற்றுக்கொடுப்பதற்குப் பதில் நீங்கள் கற்றுக்கொள்ளத் தொடங்கினால், அன்பும் ஆதரவும் கனிந்த ஒரு வலிமையான உறவை அந்தக் குழந்தையுடன் வளர்த்துக்கொண்டால், அதுவே உங்கள் குழந்தைக்கு நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த விஷயம்! நீங்கள் வளர்ந்து வந்த பருவத்தில் உங்களுக்குள் ஏதாவது சிக்கல் வந்தால், நீங்கள் உங்கள் பெற்றோரை அணுகினீர்களா அல்லது நண்பர்களை அணுகினீர்களா? உங்களில் பெரும்பாலானவர்கள் நண்பர்களைத்தான் அணுகியிருப்பீர்கள். ஏனென்றால், உங்கள் பெற்றோருக்கு எதுவும் புரியவே இல்லை. அவர்களும் அதே அபத்தங்களை 10, 20 ஆண்டுகளுக்கு முன்பு கடந்து வந்திருப்பார்கள். ஆனால் அவற்றை மறந்துவிட்டு ஏதோ வேறொரு கிரகத்தில் இருந்து வந்தது போல் விசித்திரமாக நடந்து கொள்வார்கள்.

பெற்றோர்கள் இப்படி நடந்து கொண்டால் பிள்ளைகள் வெளியில்தான் உதவி தேடிப் போவார்கள். தங்கள் நண்பர்களிடம்தான் ஆலோசனை கேட்பார்கள். அந்த நண்பர்களும் உங்கள் குழந்தை போலவே குழப்பத்தில் இருப்பதால் வழிகாட்டுதல் எந்த விதத்தில் இருக்கும் என்று உங்களால் கணிக்க முடியாது. தனக்குத் தெரிந்ததை அது சொல்லும். எனவே மிகச் சிறந்த வழி என்னவென்றால், உங்களை எளிதாக அனுகும் விதத்தில் இணக்கமான நல்லுறவை குழந்தைகளோடு வளர்த்துக் கொள்வதுதான். குழந்தைகளிடமிருந்து மரியாதையை எதிர்பார்க்காதீர்கள், அன்பை எதிர்பாருங்கள்.

குழந்தைகள் தங்களை மதித்து நடக்க வேண்டும் என்று பெரும்பாலான பெற்றோர்கள் கருதுகிறார்கள். நீங்கள், உங்கள் குழந்தைகளுக்குச் சில ஆண்டுகள் முன்னதாக பூமிக்கு வந்தீர்கள். உடலளவில் குழந்தையை விட பெரிதாக இருக்கிறீர்கள். பிழைப்புக்கு சில தந்திரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். இவற்றை விட எந்த விதத்தில் நீங்கள் உங்கள் குழந்தையைக் காட்டிலும் மேம்பட்டிருக்கிறீர்கள்?

உங்கள் இயல்புகளை குழந்தைகளின் மீது திணிக்காமல் நட்பு ரீதியான உறவை உருவாக்கிக் கொண்டால், அவர்கள் தவறான பாதைக்கு போக வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. அதே நேரம் 100% உத்தரவாதம் கிடையாது. எப்போது ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டீர்களோ, அப்போதே சில அபாயங்களுக்கும் நீங்கள் தயாராக வேண்டும். ஏனென்றால், உங்கள் குழந்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தப் போவது நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வீதி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, தொலைக்காட்சி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும் பள்ளியில் இருப்பவர்களும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறார்கள்.

இப்படி லட்சக்கணக்கான தாக்கங்கள் ஏற்படப் போகின்றன. அவற்றில் எந்தத் தாக்கத்தின் மீது உங்கள் குழந்தைக்கு மிகுந்த ஈர்ப்பு இருக்கிறதோ, அதை நோக்கிச் செல்லப் போகிறது. பெற்றோருடன் இருப்பதுதான் தங்களின் மிகப் பெரிய ஈர்ப்பு என்ற உணர்வை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனந்தமான, அறிவுப்பூர்வமான, அற்புதமான மனிதராக உங்களை வெளிப்படுத்திக் கொண்டால், உங்கள் குழந்தை வேறெந்தத் துணையையும் தேடிப் போகாது. எளிய விஷயங்களைக்கூட உங்களிடம் வந்து கேட்கத் தொடங்கும்.

அன்பும் ஆனந்தமும் மிக்க சூழலில் உங்கள் குழந்தைகளை நீங்கள் உருவாக்கினால், தவறுகள் நடக்க வாய்ப்பு இல்லை. வீட்டிலோ, பள்ளியிலோ, சமூகச் சூழலிலோ துயரமான சூழலில் குழந்தை வளர நேர்ந்தால்தான் தவறுகள் நடக்கின்றன. வீட்டுக்கு உள்ளும் வெளியிலும், நாள்தோறும் கோபம், அச்சம், பரபரப்பு, பாதுகாப்பின்மை ஆகியவற்றையே குழந்தைகள் எதிர்கொண்டிருந்தால் அவர்கள் எப்படி ஆனந்தமாக வாழ முடியும்? அன்புக்கும் ஆனந்தத்துக்கும் நீங்கள் உதாரணமாய் திகழ்ந்தால், நன்மைகள் தானாக நிகழும்.

# ‘வழி’யில்லை மழைநீருக்கு

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

முன்பெல்லாம் எப்போதாவது ஒருமுறை நாகப்பட்டினத்தில் புயல், சென்னையில் வெள்ளம் என்று செய்திகள் வரும். ஆனால், இப்போது அப்படி அல்ல கிட்டத்தட்ட ஆண்டு தோறும் ஆடி போய் ஆவணி வருவது போல தவறாமல் புயலும் வெள்ளமும் வந்துகொண்டே இருக்கிறது, எங்கே எப்போது என்பதுதான் செய்தி. பேரிடர் மேலாண்மை என்ற புதிய துறை உருவாகி அதன் பணிகளும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில் இதில் பெரும் பொறுப்பு வகிப்பது உள்ளாட்சி அமைப்புகள் தான். ஆனால் பல நேரங்களில் அவை தங்கள் கடமைகளைச் சரியாக செய்யாததுபோலவே தோன்றுகிறது.

தொடங்கி இருக்கிறது. இப்போதே குளங்கள் எல்லாம் நிரம்பிவிட்டன. இப்போது நிரம்பியுள்ள குளங்களில் நீர் மேலாண்மை செய்ய முடியும் என்று பார்த்தால் பெரிய வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை. அதற்கு காரணம் நீர்வழி பாதைகளிலும், நீர் நிலைகளிலும் நாம் பராமரிக்கும் விதமும் சரியான திட்டமிடல் இன்மையும் தான் என்று தோன்றுகிறது.

கோவை பெரியகுளத்தில் இருந்தும், இன்னும் இரண்டு மழைநீர் வாய்க்கால்களில் இருந்து வாலாங்குளத்துக்கு நீர் வருகிறது. அந்த குளம் நிரம்பி வழிந்தால் அடுத்தது அதில் இருந்து வழியும் நீர் சங்கனூர் பாலத்திற்கும் சிங்காநல்லூர் குளத்துக்கும் போக வேண்டும். ஆனால் அதற்கு சரியான பாதை இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல

**சுற்றியுள்ள அனைத்து மாநிலங்களிலும் நீருக்காக கையேந்தி, அது தொடர்பான வழக்குகளும் சிக்கல்களும் இருந்துகொண்டே இருக்கின்றன. இந்நிலையில் நம்முடைய பகுதியில் பெய்யும் மழை நீரைச் சேமிக்க வேண்டியது முதல் கடமையாகும்.**

மழை நீர் வெள்ளமாக மாறி, வீணாக எங்காவது போய்ச் சேரும். நீரை சேமிக்கவும் முடியாது என்ற நிலை நீடிக்கும். அதுவே மூன்று மாதம் கழித்துப் பார்த்தால் சொட்டு தண்ணீர் கூட இல்லாமல் மக்கள் குடிநீருக்கு ரோடு ரோடாக அலைவார்கள், தண்ணீர் லாரிகள் பறக்கும், கேன் வாட்டர் வணிகம் கொடி கட்டி பறக்கும். எவ்வளவு சிரமப்பட முடியுமோ தண்ணீருக்கு அவ்வளவு சிரமப்படுவோம், பிறகு மறுபடியும் மழைவரும் மறுபடியும் இதே மாதிரி செய்வோம்.

எடுத்துக் காட்டாக கோயம்புத்தூரில் நல்ல மழை பெய்து குளங்கள் எல்லாம் நிரம்பி உள்ளன. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் வடகிழக்கு பருவமழை இப்போதுதான்

வேண்டும். லட்சக்கணக்கில் செலவு செய்து குளத்தை தூர்வாரி டைல்ஸ் போட்டு அழகு செய்வதைவிட குளத்துக்கு தண்ணீர் வருகின்ற, வெளியேறுகின்ற வழிகளை முறையாக பராமரிப்பதுதான் முக்கியம் என்று தோன்றுகிறது.

இந்த ஆண்டு சில நாட்களுக்கு முன்பு பெரிய குளத்திற்கு நீர் அதிகமாக வருகிறது என்று சொல்லி, நீர் வரும் வழியில் உள்ள வாய்க்காலை உடைத்து வயலுக்கு நீர் போகும் வழி செய்யப்பட்டிருக்கிறது. வரலாறு காணாத மழை பெய்து சிக்கல் ஏற்படும்போது இப்படி செய்வது சரி. மழை இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது இன்னும் பல நாட்களுக்குத் தொடரும் போது என்ன செய்யப் போகிறோம். இதன் தொடர்பாக ஏற்படும் வெள்ள

சேதங்களுக்கு யார் பொறுப்பேற்று நஷ்டங்களை சரி செய்வது? நாடு இருக்கும் நிலையில் மக்களின் பொருளாதார நிலை இருக்கும் நிலையில் பணத்தை இது போன்ற சேவைகளுக்காக தான் செய்யப் போகிறோமா?

மழை நீரோ, பணமோ அதனை சரியாக கையாளுவதும் சேமிப்பதும் தான் நல்லது. நீர் மேலாண்மையை சரியான முறையில் செய்வது அனைவருக்கும் நல்லது. ஏற்கனவே வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருந்தாலும், நகரமான காரணத்தாலும் மக்கள் தொகை அதிகமுள்ள காரணத்தாலும், மழை அளவு குறைந்து இருப்பதாலும் தமிழகத்திற்கு அதிகமான நீர் தேவை இருப்பதை அனைவரும்



அறிவார்கள். சுற்றியுள்ள அனைத்து மாநிலங்களிலும் நீருக்காக கையேந்தி, அது தொடர்பான வழக்குகளும் சிக்கல்களும் இருந்துகொண்டே இருக்கின்றன. இந்நிலையில் நம்முடைய பகுதியில் பெய்யும் மழை நீரைச் சேமிக்க வேண்டியது நம்முடைய முதல் கடமையாகும்.

இந்த முதல் கடமையை செய்வதற்கு நம்முடைய முன்னோர்கள் செய்த பேருதவி குளங்களும், குட்டைகளும், வாய்க்கால்களும் ஆகும் என்பதை மறந்து விடக் கூடாது. அவற்றை சரியான முறையில் பராமரித்து நீர் மேலாண்மையைச் செய்யும்பொழுது மழை வெள்ளமோ அல்லது வறட்சியோ அதனை எதிர்கொள்ள

முடியும். வளர்ந்த நாடுகளைப் போலவே நம்முடைய நாடு மாறுவதற்கு இது உதவும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டி என்பது வண்ண விளக்கு அலங்காரங்களும், கான்கிரீட் தோரணங்களும் அல்ல. இங்கு வசிக்கும் மக்கள் தங்களுடைய குடிநீர் தேவைக்கும் சீரான போக்குவரத்து போன்ற தேவைகளுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை சரியான முறையில் அமைத்து வாழ்வதே ஸ்மார்ட் சிட்டி என்று பொருள்படும். அதைவிடுத்து தேவையற்ற வழிகளில் பணத்தை செலவு செய்து தேவைக்கான செலவுகளுக்கு பணம் இல்லாமல் எப்பொழுதும் தவிர்க்கக்கூடாது.

மழைக் காலம் வந்திருக்கிறது. மழை நீரை சேமிப்பது என்பது நீர் மேலாண்மைக்கு மிகச் சிறந்த உதவியாக இருக்கும். குடிநீர் தேவைக்கும், நிலத்தடி நீர் மேம்படுவதற்கும், விவசாயத்துக்கும் என்று பல வகையிலும் தேவைப்படும் நீரை இயற்கை வழங்குகிறது. நீரை எவ்வாறு சேமிக்க வேண்டும் என்பதற்கு நம் முன்னோர்கள் வகுத்துத் தந்த குளங்களும் குட்டைகளும் வாய்க்கால்களும் இருக்கின்றன.

அவற்றின் மூலமாக உலகத்திற்கு வழிகாட்டக் கூடிய நீர் மேலாண்மை செய்பவர்களாக நாம் மாறுவோம்.

## தேங்காய் மற்றும் கொப்பரை விலை எப்படி இருக்கும்?

**- வேளாண் பல்கலை கணிப்பு**

**தி கோவை மெயில்**

தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிலையாக இருக்கும் என்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கணித்துள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு: உலகளவில் தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தோனேசியா, பிலிப்பைனீஸக்கு அடுத்தபடியாக இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் தேங்காய் உற்பத்தியில் கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் 93 சதவீதத்திற்கு மேல் பங்கு வகிக்கின்றன. இந்தியாவிலிருந்து ஐக்கிய அரபு நாடுகள்,ஐக்கியநாடுகள், ஈரான் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளுக்கு அதிகளவு தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், கோவை, திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

தற்போது பெரும்பாலான கொப்பரை வரத்தானது பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், பொள்ளாச்சி, சேலம், காங்கேயம், மைசூர் மற்றும் திருப்பதி ஆகிய இடங்களிலிருந்து பெருந்துறை சந்தைக்கு வருகிறது.

முந்தைய பருவத்தை ஒப்பிடுகையில் இப்பருவத்தில் கொப்பரையின் வரத்தானது அதிகமாக உள்ளது. நல்ல பருவமழை காரணமாக தேங்காய் உற்பத்தி மற்றும் வரத்து அதிகரித்துள்ளது. வரும் மாதங்களிலும் இது தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர், டிசம்பர் 2021 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.25 முதல் ரூ. 27 வரை இருக்கும் மற்றும் நல்லதரமான கொப்பரை கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.102 வரை இருக்கும் என அறியப்படுகிறது. ஏனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில்

## ‘வெஸ் ஜெனக்ஸ்’ வருகைப்பதிவு கருவி கண்டுபிடிப்பு




வெஸ் ஜெனக்ஸ் வருகைப் பதிவேடு கருவியை சிறப்பு விருந்தினர் சந்திரசேகர் அறிமுகம் செய்த போது. உடன், எஸ்.என்.ஆர். சன்ஸ் சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாரயணசுவாமி, கல்லூரி முதல்வர் அலமேலு.

**தி கோவை மெயில்**

ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் மேலாண்மை துறையின் முதலாம் ஆண்டு வரவேற்பு விழா மற்றும் கல்லூரியின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மையத்தின் புதிய கண்டுபிடிப்பான வெஸ் ஜெனக்ஸ் வருகைப் பதிவேடு கருவி அறிமுக விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் அலமேலு அனைவரையும் வரவேற்றார். எஸ்.என். ஆர்.சன்ஸ் சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாரயணசுவாமி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக கோவை ரூட்ஸ் குழுமத்தின் ஸ்ட்ராட்டஜிக் சோர்சிங்கின் நிர்வாக இயக்குனர் சந்திரசேகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

விழாவின் ஒரு பகுதியாக கல்லூரியின் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மையம் உருவாக்கிய முக அங்கீகாரம் கொண்டு வருகை பதிவேற்றக் கருவியினை அறிமுகம் செய்து வைத்தார். கொரோனா காலத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சமூக இடைவெளி பின்பற்றவும், நோய்த் தொற்று பரவாமல் இருக்க இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. வெஸ்ஜெனக்ஸ் என பெயரிடப்பட்டுள்ள இக்கருவியை செயற்கை நுண்ணறிவு மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் முறையில் இயந்திரவியல், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் செயற்கை நுண்ணறிவு துறை சார்ந்த பேராசிரியர்களும் மாணவர்களும் உருவாக்கி உள்ளனர்.

இக்கருவி வருகைப் பதிவேடு மட்டுமல்லாமல் ஒருவரின் உடல் தட்பவெட்பம், அவர் பணிபுரிகிற நிர்வாகம் மற்றும் அவரின் தகவல்களை இருக்கும் இடத்தில் கொண்டு மீட்டெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது மேலும் இக்கருவியானது விமான நிலைய சோதனை, குற்றம் கண்டறிதல் என பன்முகத் தன்மை கொண்டதாக உருவாக்கியிருப்பது சிறப்பம்சம் ஆகும்.

## தேடலும் திட்டமிடுதலும் அவசியம்



பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியின் போது.

**தி கோவை மெயில்**

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற பன்மொழி பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இணைய வழியில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பாரதியார் பல்கலைகழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் இருந்து 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் அறக் கட்டளையின் நிறுவனரும் ரூட்ஸ் நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் தலைவருமான கவிதாசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

அவர்தம் உரையில், ”தன்னம்பிக்கை ஒருவனை உயர்த்தும் என்றும் ஓர் உயர்ந்த இலக்கை அடைவதற்குத் தேடலும் திட்டமிடுதலும் அவசியம் என்றும் குறிப்பிட்டார். மேலும், வாய்ப்புகளைத் தேடி அலையாமல் வாய்ப்புகளை உருவாக்கும் இளைய சமுதாயம் உருவாக வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

இவ்விழாவில் பாரதியார் பல்கலைகழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சித்ரா வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் லச்சுமண சாமி தலைமையுரை ஆற்றினார்.

## எதிர்காலம் குறித்த தெளிவான செயல்திட்டம் வேண்டும் - டாக்டர்.நல்ல.ஜி.பழனிசாமி

**தி கோவை மெயில்**

டாக்டர் என்.ஜி.பி தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர் வரவேற்பு விழா கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் மைல்கல் சாதனைகள் பலவற்றை எடுத்துரைத்து வரவேற்புரை ஆற்றிய முதல்வர் பிரபா, வளாகத்தில் உள்ள உயர்தரமான கற்றல் கற்பித்தல் வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மாணவர்கள் முறையாகப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.

கே.எம்.சி.ஹெச் நிறுவனத் தலைவர் டாக்டர். நல்ல. ஜி.பழனிசாமி தனது தலைமை உரையில், மாணவர்களுக்கு தங்கள் எதிர்காலம் குறித்த தெளிவான செயல்திட்டம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மாணவர்கள் குறுகிய வட்ட சிந்தனைகளை விட்டு வெளியேறவும், உலகளாவிய வேலை வாய்ப்புகளை ஆராயவும் மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

கல்லூரி தாளாளர் டாக்டர். தவமணி பழனிசாமி பேசியதாவது: மாணவர்கள் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை எடுத்துரைத்ததுடன் கார்ப்பரேட் துறையின் எதிர்பார்ப்புகளையும், அவற்றை மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கினார். இந்தியாவின் எதிர்காலம் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களை சார்ந்துள்ளது என்பதை வலியுறுத்திய அவர், அடுத்த தலைமுறைக்கு தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனப் பேசினார்.

கல்லூரி அறங்காவலர் டாக்டர்.அருண் பழனிசாமி, தனது உரையில் மிகவும் போட்டி நிறைந்த இந்த உலகில் பொறியியல் துறையின் வாய்ப்புகள் பற்றிக் கூறினார். இக்கல்லூரி மாணவர்கள் கல்லூரியின் தொழில்துறை மற்றும் நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் காரணமாக மேம்பட்ட தொழில்துறை தொழில்நுட்பங்களில் நல்ல அறிமுகமும் அனுபவமும் பெறுவார்கள் என்று கூறினார்.




என்.ஜி.பி தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர் வரவேற்பு விழாவின் போது சிறப்பு விருந்தினர் செந்தில்குமார் குத்து விளக்கேற்றுகிறார். உடன், கல்லூரி அறங்காவலர் அருண் பழனிசாமி, கே.எம்.சி.ஹெச் நிறுவனத் தலைவர் டாக்டர். நல்ல.ஜி. பழனிசாமி, கல்லூரித் தாளாளர் தவமணி பழனிசாமி.

தலைமை விருந்தினரான செந்தில்குமார் கூறியதாவது, பொறியாளர்கள் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள் என்று குறிப்பிட்டார். ஒரு பொறியாளர் ஆர்வம், தொலைநோக்கு மற்றும் குறிக்கோளுடன் தனது சிந்தனை செயல்முறையை வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை செதுக்கத் தேவையான திறன்களுடன் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# GREEN PARK COACHING CENTRE

GPCC

NEET / AIIMS / JIPMER

Head Office

106/3A & 106/2, Postal Nagar, Bodhupatty (Po), NAMAKKAL.

CELL : 93610 88506 | 93424 41936 | 93424 40024

Branches

CHENNAI Cell : 94999 06121, 94990 08007

COIMBATORE Cell : 99446 31172, 76049 50938

KARUR Cell : 98431 92355, 76959 74012

ERODE Cell : 73588 87541, 73588 89417




## NEET - 2021 ACHIEVEMENTS




### 690 And Above




### 650 And Above




| | |
|---|---|
| 700 And Above | 03 |
| 650 And Above | 48 |
| 600 And Above | 229 |
| 550 And Above | 646 |
| 500 And Above | 1180 |
| 450 And Above | 1834 |

### 600 And Above

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| VIDHYAKARAN P | 649 | SRIDHARAN S | 634 | DHARSHINI SHREE R | 624 | MADHAN KUMAR P | 617 | YAZHINI K S | 611 | AJAYNIVASH R | 605 |
| DEEPTHI LAKSHMI P | 647 | JOSHITHA K | 633 | SUDALAI SURESH M | 624 | SOWMIYA M | 617 | SURIYA PRAKASH R | 611 | MATHIVATHANI S | 605 |
| KAVIN ATHITHYA J L | 646 | APARNA M | 633 | ABHIVARSHINI P | 624 | PARAMESHWAR V | 616 | INDUJA V | 611 | RUFFUS EVANS RAJ S | 605 |
| SRINITHI T | 646 | SIBISHARAVANAN M | 633 | NAYSHIKARUBY S | 623 | AARTHIGA P | 616 | SANJANA MAHESH | 611 | VINOTH KUMAR S | 605 |
| LEKHA SWATHY S S | 646 | ASHWIN R | 633 | KARUPPAIYA V | 623 | NANDHINI J K | 616 | EMIL RONALD IRUDAYA THASON | 610 | RADHAI S | 604 |
| HARISH V | 645 | HIMASAILY V | 632 | LAKSHMI PRIYA SRI M | 623 | SRIDEVI K | 616 | RAMANUJA SIDDHARTH R | 610 | MANI THENDRAL K | 604 |
| SHANMATHI S M | 645 | DEVIPRIYA S | 631 | SARAVANAKUMAR V | 622 | MUGIL M | 615 | MADHAVA KUMAR R C | 610 | SRIMATHI R | 604 |
| SUJAI R | 645 | ANIKA R | 631 | HARIHARAN V S | 622 | SUGANTHA PREETHI P | 615 | NAGARAJ R | 610 | SIVANI R | 604 |
| YOKESH A G | 645 | RAKSHAKARTHIKA K C | 630 | ABHIRAM A | 621 | KOWSIK S | 615 | PRAJEETRAJ S | 610 | POOJA L | 604 |
| DEEPA DHARSHINI | 645 | GUNAVIDHYA S | 630 | THIYANESH S | 621 | HARI V | 615 | RAMASAMYJANAGAN S | 610 | JAYAASRI S | 604 |
| PAVITHRA K | 643 | NANDHINI S | 630 | AKHIL E M | 621 | HARIVISHNU S T | 615 | RAMYA PRIYA A | 609 | JAI SIVALII U E N | 603 |
| HARSHA V | 643 | GOKULKANNAN C | 630 | SIBI SANGEETH G | 621 | JAYASREE SAMYUKTHA R | 615 | GIRI PRASATH V | 608 | MUHIL SURYAA K V | 603 |
| SUMITHA SUDALAI MANI | 642 | SIVAKUMAR V | 630 | ARITHA R | 621 | PARTHASARATHY M J | 615 | SWETHA N S | 608 | PRITHY V | 603 |
| NISHANTH JERRY AMAL N | 641 | NAVEENA P S | 630 | KEERTHANA S | 620 | KARICHIKKUMAR M | 614 | ASMITHA DA | 608 | JERVIN PAUL JENISHRAJ I | 603 |
| JOHN JOSEPH CLINTON F | 641 | LAKSHENYAA B | 630 | KAVIPPRIYAA P | 620 | UMASANKAR K S | 614 | HARI NARASIMHA S | 608 | SIBIBALA V S | 602 |
| PUSHKALA D G | 641 | RISHI RAGAV KARTHIK T | 629 | DOMNICA DONATUS K | 620 | SURYA PRABAHARAN S | 614 | SHRUTHIKA D | 607 | BOJA PRASAD S | 602 |
| KARTHIK RAJA D | 641 | DIVYA DHARSINI S M | 629 | ROSHINI S | 620 | DHARSIKA M | 614 | SRI AAKASH ARUN | 607 | SIVADHARSHINI SIVAKUMAR | 602 |
| HEMA PRIYADARSHINI K S | 641 | NEHA S | 629 | PRIYADHARSHINI J | 620 | HARSHINI E | 614 | PARTHIBAN N | 607 | CHERAN S S | 602 |
| DANUSH ANAND R | 641 | VENKET JAI G | 629 | PRANAVKUMAR S | 619 | MAHALAKSHMI M | 614 | RAGHURAM S | 607 | VINISHAA SRI GOVINDARAJ | 602 |
| VIGNESH J | 640 | OVYA D | 628 | SHIVANI S | 619 | NARESH H | 614 | SRILAKSHMI S | 607 | YUGESH K P | 602 |
| SHRILEKHA | 640 | ARUNESHWARAN C | 628 | SOWMATHI M | 618 | ADEEP KRISHNA S | 614 | SHIFAPARVEEN M | 606 | SOWMYA S R | 602 |
| DEEPAK DEIVEEGAN | 640 | ASHOK KUMAR P | 628 | SHALINI T | 618 | NAVEEN SANKAR L R | 614 | SURESH KUMAR R K | 606 | ABARNA M | 602 |
| HANSIKKA C | 639 | NOORUL HIDHAYA S | 627 | SUJI B | 618 | SARANSRINIVAS S | 613 | SUPRAJA V | 606 | RITHUBHARANII N | 602 |
| VISHNU PRIYA B A | 639 | PARTHIBAN C | 627 | SOWMEIYAN E | 618 | RENGANATH S | 613 | DEVADHARSHINI G | 606 | SWETHA N P | 601 |
| TAPASWINI S | 638 | SAKTHIBALAN S | 626 | PRANAV RAM R | 618 | VAISHNAAV V K | 613 | ANANTHAVATHANI K | 605 | LEHA SWETHA M | 601 |
| MITHUNA S | 638 | RIDHU VARSHAN N | 626 | MANOJ KUMAR S | 618 | MANO RANJAN R | 612 | MAHESHWARI J | 605 | DHINESH T | 601 |
| SIVAKANI S | 638 | CHRISTY DORATHY S | 626 | SINDHU S | 617 | VIJAYA SUBIKSHAA V | 612 | SWETHA E M | 605 | TARINI S V | 600 |
| VENGATARAMANAN R | 636 | VISHWANATH S | 625 | ASHVITHA K | 617 | ALICE TESARINA V | 612 | AKASH A | 605 | SELVA BHARATHI K | 600 |
| MOHANA SANKARI P | 636 | AARTHI S | 625 | VISHRUTA CHEMION PONNIAH | 617 | TAMIZHARUVI T | 612 | KANNAN P | 605 | VINOTHINI M | 600 |
| ABISRIVARSHINI S | 635 | AJAYDHARSAN J | 625 | RAMACHANDRAN S M | 617 | KAVEYA PRIYADHARSHINI R K | 611 | SAMEERA ROSHAN A | 605 | VISHAL M | 600 |
| | | | | | | | | | | VIKAS SABAREESHAN S K | 600 |

## NEET - 2022 ADMISSIONS OPEN...

### NEET COURSES OFFERED

- OFFLINE CLASSROOM PROGRAMME
- ONLINE PROGRAMME (STUDY FROM HOME)
- TEST SERIES PROGRAMME (ONLINE)

www.gpccnamakkal.com